சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 4	இதழ்: 07	டிசம்பர் - 2022	விலை - ரூ.15/-
VOL:4	ISSUE: 07	DECEMBER - 2022	Rs. 15/-



திருவாசகம் பாடிய மணிவாசகர்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ. **550** மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-4 மலர்-7 டிசம்பர் - 2022

வெளியிடுபவர் / ஆசிரியர்

V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்

திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு

திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு

சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.

செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



இவ்வுலகில் எந்த பொருளும், உறவும் நிரந்தரமில்லை. ஆனால் உன் எண்ணத்தால் விளையும் செயல்பாடுகள் மட்டுமே நிரந்தரம்.

சிற்றின்ப வாழ்க்கை உன் உடல் எண்ணத்தை ஆனந்தபடுத்தும். ஆனால் பேரின்ப வாழ்க்கை உன்னையும் உன்னை சார்ந்த வர்களையும் ஆனந்தபடுத்தும்.

பந்தம்,பாசம்,பணம் நீ வாழும் வரை மட்டுமே உன்னோடு இருக்கும். ஆனால் அன்பு, நன்றி, கருணையோடு நடந்து கொண்டால் நீ மடிந்தாலும் உனது செயல் எல்லோர் மனதிலும் வாழும்.

இருப்பதை கொண்டு வாழ கற்றுக் கொள். உன்னை தேடி எது வருமோ அது கண்டிப்பாக வரும். செல்வமும்,சுபிட்சமும் நிலையற்றவை.

இவ்வுடல் அழிவிற்கும், மரணத்திற்கும் உட்பட்டது. இதை உணர்ந்து இம்மை, மறுமைப் பொருட்களின் மீதுள்ள பற்றுக்களை விட்டு விட்டு உனது கடமையைச் செய்.

எதிர்பார்த்து வாழ்ந்து ஒவ்வொரு நிமிடமும் ஏமாறாதே. நீ உன் கடமைகளை கவனமாக செய்து வா உன்னுடைய குறிக்கோளை நீ நிச்சயம் அடைவாய்.

என் வார்த்தைகள் மீது நம்பிக்கை வைத்து செயல்படு. வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவாய். எல்லாம் முடிவுறும் நீ நலமாக வாழ்வாய். உனக்கு எல்லா சூழ் நிலைகளிலும் நான் துணை நிற்பேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!



பகவான் சாயிநாதரின் அருளால் ஐம்பத்து மூன்றாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) வெகு விமரிசையாக நடைபெற்றது.

வழக்கம்போல் காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் புத்தக வெளியீட்டு விழா துவங்கியது. 10 மணிக்கு "சாயி காணக்குயில்" திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், திருமதி. ஜானகி சீனிவாசன், செல்வி. அமிர்தா, செல்வி. அட்சயா ஆகியோ ரின் பஜனை நிகழ்ச்சி நடைபெற்றது.

காலை 11 மணிக்கு 52 வது இதழின் வெளியீட்டு விழா துவங் கியது. இம்மாத இதழை, "பாராயணப் பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்கள் வெளியிட, பாபாவின் பக்தர்கள், அய னாவரம் திரு. தாகீர் சொரீப் அவர்களும், குரோம்பேட்டை திரு.சிவக்குமார் அவர்களும் இணைந்து பெற்றுக் கொண்டார்கள்.

நமது இதழை வாசித்துப் பார்த்த திருநின்றவூர் திரு. முரளி சாய்ராம் அவர்கள், நமது ஆசிரியர் அவர்களிடம் தொடர்பு கொண்டு பாராட்டியது



மட்டுமில்லாமல், சாயி மகராஜ் குருவை தேடி இதழ் ஒவ்வொரு சாய் பக்தர்களின் இல்லத்திலும் இருக்க வேண்டிய புத்தகம்.

அதற்குண்டான முயற்சியை நானே முன்னெடுக்கின்றேன் என்று கூறி உடனடியாக ஐந்து, மூன்று வருட சந்தாதாரர்கள் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார்கள். அதுமட்டும் இல்லாமல் அடுத்த மாதம் 100 இத ழுக்கு முன்கூட்டியே ஆர்டர் கொடுத் துள்ளார்கள். அவரும் அவரது குடும் பத்தார் அனைவரும் பகவான் சா யிநாதரின் பரிபூரண ஆசியோடு அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.



அதைப்போலவே, பாபாவின் பக்தரும் சாயி சேவகருமான, சேலம் திரு.ரமேஷ் அவர்கள் ஐந்து ஒரு வருட சந்தாவும், இரண்டு மூன்று வருட சந்தாவும் இணைத்து சாயி சேவை புரிந்திருக்கின்றார். அவரும் அவரது குடும்பத்தினர் அனைவரும் பகவான் சாயிநாதரின் பரிபூரண ஆசியோடு அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

வந்திருந்த அனைத்து பக்தர்க ளுக்கும், சாய் தியானாலயா பிரார்த் தனை மையம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. மேலும் இதழ் வெளி யீட்டை ஒட்டி ஏழை எளியவர்களுக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச் சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி, ஆரோக்கியத் துட னும்,நிம்மதியுடனும் வாழ வேண் டும் என பிரார்த்தித்து நிறைவு செய் கின்றோம்.

மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்!
வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

- அன்புடன் ஆசிரியர்

"அதி தேவதை" யின் 106 வது சமாதி திருநாள்

திருவாரூர் மாவட்டம், 34,கூத்தனூர் பூந்தோட்டம் ஸ்ரீ சிவசித்தர் சீரடி சாய்பாபா துவாரகாமாயி ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சாயிநாதரின் பரம பக்தையும், ஸ்ரீ சாயி சமஸ்தானத்தின் அதிதேவதையுமான ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயி அன்னையின் 106 வது மகாசமாதி ஆராதனை மஹோத்ஸவ பெருவிழா 20.11.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது.



விழாவில் சீரடியில் இருந்து "வாழும் பாபா" ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் அவர்கள் கலந்து கொண்டு விழாவிற்கு தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். அன்னையின் இச்சிறப்பான பெருவிழாவை கூத்தனூர் ஸ்ரீ சிவசித்தர் சீரடி சாய்பாபா துவாரகாமாயி ஆலயத்தின் நிறுவனர் திரு. சுதாகர் அவர்களும், நிர்வாகி திருமதி.ஆஷா சுதாகர் அவர்களும் மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தி முடித்தார்கள்.

அன்னையின் மகாசமாதி விழாவில் கலந்து கொள்ள தமிழ்நாடு மட்டுமின்றி பெங்களூருவில் இருந்தும் பக்தர்கள் திரளாக வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காலை 8.30 ல் இருந்து மதியம் 1.00 வரை, ஸ்ரீ சாயிநாதருக்கும், ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி ஆகியோருக்கு, மூல மந்திர ஹோமமும், சிறப்பு மஹா அபிசேக தீபாராதனையும், வாடாக்குடி ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சனேயர் பீடம், குருஜி ஸ்ரீ அனுமன்தாஸ் சுவாமிகள் அவர்களால் மிகச்சிறப்பாக நிகழ்த்தப் பட்டது.

அதைத்தொடர்ந்து அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி,சாயிநாதரிடம் கொண்டிருந்த மதுர பக்தியைப் பற்றி,



"பாராயணப் பகலவன்" திரு.சுந்தர் சாய் அவர்களும், ஆசிரியர் திரு. ஸ்ரீராம் அவர்களும் பக்தர்களிடையே சொற்பொழிவாற்றினார்கள்.

மதியம் 1.00 மணிக்கு வந்திருந்த பக்தர்கள், ஊர் மக்கள் அனைவருக்கும் வடை, பாயாசத்துடன் சிறப்பான அன்னதானம் வழங்கப்பட்டது. அதைத்தொடர்ந்து மதியம் 3.00 மணிக்கு, சென்னை திருநின்றவூர் திரு.முரளி சாய்ராம் குழுவினரின் பஜனை நிகழ்ச்சி மிகச்சிறப்பாக நடைபெற்றது. திரு.முரளி சாய்ராம் பஜனையின் சிறப்புகளை எடுத்துக்கூறி பக்தர்களை நடனமாடவைத்தது கண்ணுக்கும் காதுக்கும் விருந்தளித்தது.

மாலை 5.00 மணிக்கு ஸ்ரீ சிவசித்தர் சீரடி சாயிபாபா துவாரகாமாயி அறக்கட்டளையின் சார்பாக சாயி சேவை செய்த 15 நபர்களுக்கு விருது வழங்கி பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. விருதுகளை சீரடி அச்சுதானந்த சுவாமிகள் வழங்கி சிறப்பித்தார்கள். திருமதி. இந்திரா ராகவன் அவர்கள் அன்னையின் ஆத்ம பக்தியை மனமுருக விரிவாக பக்தி





சொற்பொழிவாற்றினார்கள்.

நமது சாயி மகராஜ் குருவைதேடி ஆன்மீக மாத இதழின் சார்பாக, அதி தேவதை நூலின் ஆசிரியரும், நமது அருமை நண்பருமான திரு. சாய் சரவணன் அவர்களுக்கு, அவரின் அயராத ஆன்மீக சேவைக்காகவும், அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி அவர்களை பக்தர்களிடம் கொண்டு சேர்க்க அவர் செய்திட்ட மகத்தான சேவைகளுக்காகவும், அவரை வாழ்த்தி அவருக்கு " அம்மையின் மைந்தன்" என்ற விருதை வழங்கி கவுரவித்தது. அவ்விருதை, ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள் சாய்சரவணனுக்கு அளித்ததை பெரும் பாக்கியமாக கருதுகிறோம்.

மாலை 6.00 மணிக்கு அதி தேவதை ஸ்ரீ அன்னைக்கு தீபசோதி வழிபாடு தொடங்கியது. ஏராளமான பக்தர்கள் ஆலயம் முழுவதும் தீபங்களை ஏற்றி தீப வழிபாடு செய்தார்கள். தீப ஒளியில் ஸ்ரீ சாயிநாதரும், ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியையும் காண கண்கொள்ளாகாட்சியாக ஜொலித்தார்கள்.

இரவு 7.00 மணிக்கு, சந்திரசேரன் கிட்டப்பா பிள்ளை அவர்களின், தஞ்சை கிட்டப்பா நாட்டியாலயா மாணவர்கள், பாபாவின் பாடல் களுக்கு பரதநாட்டியம் ஆடியது கண்ணையும், கருத்தையும், கவர்வதாய் அமைந்தது. இந்நிகழ்ச்சி அன்னை ஸ்ரீ இராதாகிருஷ்ண மாயிக்கு மிகச் சிறப்பான நாட்டியாஞ்சலியாக அமைந்திருந்தது.

இரவு 8.00 மணிக்கு ஸ்ரீ சாயி நாதருக்கு இரவு ஆரத்தியும், ஸ்ரீ அன்னைக்கு மங்கள ஆரத்தியும்





செய்விக்கப்பட்டு விழா இனிதே நிறைவு செய்யப்பட்டது.

விழாவிற்கு, திருத்துறைப்பூண்டியில் இருந்து சாயி சேவகரும், பாபாவின் குழந்தையுமான திருமதி. இந்திரா ராகவன், குடந்தை திரு. ஜெயராமன், கோவையில் இருந்து "ஆவோ சாயி" அறக்கட்டளை உறுப்பினர்கள் திரு. தர்மபுரி சாய் முரளி, திரு. இரவி சாய்ராம், திரு.தீபக் சாய்ராம், ஓவியர் திரு. சாயி ஜெயசந்திரன், திரு. ஸ்ரீ முரளி சாய்ராம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்னையின் இவ்வருட106 வது ஆராதனை விழாவில் கலந்து கொண்ட அனைத்து பாபா பக்தர்களுக்கும், விழா மிகச் சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைத்து சாயி சேவகர்களுக்கும், நண்பர்களுக்கும், சீரடியில் இருந்து வந்திருந்து விழாவில் கலந்து கொண்டு ஆசி வழங்கிய " வாழும் பாபா" ஸ்ரீ அச்சுதானந்தா சுவாமிகளுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை விழா நாயகன்

"அம்மையின் மைந்தன்" திரு. சாய் சரவணன் சார்பில் அனைவரது பாதங்களிலும் சமர்ப்பிக்கின்றோம்.

ஜெய் ஸ்ரீ சாய்ராம்!

ஜெய் ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயி!



சாய் தியானாலயாவில்
"சாயி லீலா"

லீலை:12, சீரடி பயணத்தில் பாபாவின் லீலை தொடர்ச்சி..

தொடர்ந்து ஒரு மாதம் முழங்கால் வலியால் அவதிப்பட்ட குரு சீரடியில் சென்று பாபாவை தரிசனம் செய்த விநாடியில் வலிநீங்கி குணமடைந்த அற்புத லீலையை படியுங்கள்.

ஒரு முறை குரு அவர்கள் 45 நபர்கள் கொண்ட குழுவுடன் சீரடி பயணம் செய்ய ஏற்பாடு செய்தார்கள். பயணத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பாக குருவிற்கு கடுமையான முழங்கால் வலி வந்து விட்டது. கால்களை தரையில் ஊன்றி அவரால் நடக்கமுடியவில்லை. சிரமப்பட்டு ஒரு காலை தரையில் தேய்துத்தான் நடக்க முடிந்தது.

வீட்டில் இருந்தஅனைவரும் மருத்துவரிடம் சென்று பார்க்கும்படி எவ்வளவோ கூறிவிட்டோம். குரு அசைந்தாரில்லை. கால்வலியுடன் பயணத்திற்கு தேவையான முன் ஏற்பாடுகள் அனைத்தையும் தான் ஒருவராகவே செய்து முடித்தார். பயண நாளும் வந்தது.

குரு சிரமப்பட்டு நடந்து வருவ தைக் கண்ட பயணிகள் அனைவ ருமே குருவிடம் கால்வலிக்கு மருந்து எடுத்துக் கொள்ள வற்புறுத்தியும் கூட குரு மருந்து எதையும் எடுத்துக் கொள்ளவில்லை. எங்களுடன் வந்த மதுரையைச் சேர்ந்த லட்சுமி என்ற



வயதான பெண்மணி ஒருவர் மட்டும் குருவிடம் தொடர்ந்து கால்களை மருத்துவரிடம் காட்டி வைத்தியம் செய்திருக்கலாமே! இப்பொழுது இவ் வளவு சிரமப்படுகின்றீர்களே! என்று தொடர்ந்து பேசிக்கொண்டே வந்தார்.

குரு அவரிடம், அம்மா எனக்கு ஒன்றும் சிரமம் இல்லை. நான் பாபாவை பரிபூரணமாக நம்புகிறேன் என்னை பாபா பார்த்துக்கொள்வார் என்றார்.

இருந்தாலும் எல்லாவற்றையும் பாபாவே பார்த்துக் கொள்வார் என்று சும்மா இருந்துவிடமுடியுமா என்ன? என்று அவர் கேட்க,

முடியாதுதான். ஆனால் நடக்கின்ற

காரியம் அனைத்தும் பாபாவாலேயே நடக்கின்றன என நம்பும் என்னைப் போன்றவர்கள் இந்த துன்பமும் பாபாவால் தரப்பட்டது என்றுதானே எடுத்துக் கொள்ள முடியும். பாபா எனக்குத் தந்ததை அவரே தீர்த்து வைப்பார். அதுவரை அதை நான் அனுபவிக்கத்தான் வேண்டும்.

நான் அதை அனுபவிக்க முடியாது என்று மாற்று ஏற்பாடு செய்தால் அந்த பிரச்சனை ஒரு முடிவிற்கு வந்து விடும் தான். ஆனால் அதை வேறொரு சந் தர்ப்பத்தில் மீண்டும் அனுபவிக்க வேண்டிவருமே! நாம் நினைத்தபடி நடந்து கொண்டால் துன்பங்கள் தொடரும். இறைவன் நினைத்தபடி நடந்து கொண்டால் இன்பங்கள் நிறையும். நான் இறைவனின் கட்டளைப்படி நடக்க விரும்புகிறேன் என்றெல்லாம் கூறிப்பார்த்தார்.

அந்த அம்மா குரு கூறியதைப் புரிந்து கொள்ளாமல் இந்த காலத்திலே எவ்வளவோ மருத்துவம் வந்து விட்டது. அதைப் பயன்படுத்திக்கலேன்னா நமக்கு அறிவு என்று ஒன்றை எதற்கு இறைவன் கொடுத்திருக்கின்றான். என்றார்கள்.

அதே அறிவுதான் இறைவனிடம் சரணாகதி அடைவதற்கும், அதன்மூலம் ஞானமார்க்கத்தை அடையவும் பயன்படும் என்று அந்த நேரத்தில் அந்த பெண்மணிக்கு உணர வாய்பில்லை. உணர்த்தவும் வாய்பில்லை. எனவே, குரு அவர்கள், சரி அம்மா, சீரடி சென்றதும் நீங்க சொன்னபடியே நான் மருத்துவரைப் போய் பார்க்கின்றேன் என்றார்.

அதற்கு அந்த அம்மா, ஓ! சீரடியில் உங்களுக்கு தெரிந்த மருத்துவர்



இருக்கின்றாரா? என்றார். ஆமாம் மிகவும் பிரபலமானவர் அவரை தெரியாதவரே இருக்க முடியாது. அவ்வளவு பிரபலமானவர் என்றார் குரு. அப்படியானால் சீரடி சென்றதும் என்னையும் அந்த மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறீர்களா? எனக்கும் பல வருடங்களாக முட்டி வலி இருக்கின்றது என்றவரிடம், கண்டிப்பாக அழைத்துச் செல்கிறேன். என்றார் குரு.

அனைவரும் சீரடி சென்றோம். குரு நடக்க முடியாமல் சிரமப்பட்டு வருவதைக் கண்ட சக பயணிகள் குருவை விசேஷ கட்டண அனுமதி பெற்று தரிசனத்திற்கு செல்லுமாறு கூற, குருவோ, அவசியமில்லை. நான் உங்களுடனே, இலவச தரிசனத்திலேயே வருகின்றேன். என்று கூறிவிட, அனைவரும் பாபாவின் பாடல்களை பாடிக்கொண்டும், பாபாவின் கதைகளை பேசிக்கொண்டும் ஆனந்தமாக இலவச தரிசன வரிசையில் சென்றோம்.

அன்று ஹோலிப் பண்டிகையா தலால் அதிககூட்டம் அதனால் நாங்கள் பாபாவை தரிசிக்க மூன்று மணி நேரம் ஆகியது. அனைவரும் ஆனந்தமாக ஆடிப் பாடிக்கொண்டு சென்றதால் நேரம் போனதே தெரியவில்லை. அனைவரும் பகவான் சீரடி நாதனை கண்குளிர தரிசனம் செய்து திருப்தி யுடன் வெளியே வந்தோம்.

வெளியே வந்ததும் தான் தெரிந்தது. குருவிடம் வாதம் செய்து கொண்டுவந்த பெண்ம ணியைக் காணவில்லை. எனவே அனைவரையும் ஓரிடத்தில் அமரச் செய்துவிட்டு, குரு அவர்கள் மீண்டும் உள்ளே சென்று அவரை தேடி கண்டுபிடித்து ஒரு மணி நேரம் கழித்து அழைத்து வந்தார்.

காணாமல் போனவர் மீண்டும் வந்துவிட்டதால் அனைவரும் அவரையே பார்த்து பேசிக்கொண்டி ருந்ததால், குருவை ஒருவரும் கவனிக் கவில்லை. பாபாவின் தரிசனத்திற்கு ஒரு காலை இழுத்து இழுத்துச் சென்றவர், தரிசனம் முடிந்து வெளியே வரும்போது இரண்டு கால்களாலும் நன்றாக நடந்து வந்ததை நான் மட்டும் கவனித்தேன். ஆனால் ஒருவரைக் காணவில்லை என்ற பரபரப்பில் உடனே நான் அதை குருவிடம் கேட்கவில்லை.

குருவும், காணாமல் போனவரும் வந்தவிட்டதால் அனைவரும் அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்த தால் நான் உட்பட குருவின் கால்வலி பற்றி அவரிடம் யாரும் கேட்கவில்லை.

பேசிக்கொண்டே அனைவரும் தங்குமிடம் வந்து சேர்ந்தோம்.

மறுநாள் அதிகாலையில் அனை வரும் நாசிக் திரையகம்பேஸ்வரர் தரிசனத்திற்கு புறப்படும் போது குரு அவர்கள் பேரூந்தில் எப்பொழுதும் போல் நின்று கொண்டே சத்சங்கம் செய்துகொண்டு வந்தார்.

பேரூந்து நாசிக்கை அடைந்தபோது தான் அந்த அம்மா சாய்ராம் உங்கள் கால்கள் சரியாகிவிட்டதா என்ன? நன்றாக நடக்கின்றீர்களே என்று கேட்டார். அதற்கு குரு, ஆமாம், நேற்று மருத்துவரைப் பார்த்து வந்தேன் அல்லவா? ஆகையால் குணமாகிவிட்டது என்றார்.

அதற்கு அந்தப் பெண்மணி, ஏன் சாய்ராம், மருத்துவரிடம் என்னையும் அழைத்துச் செல்லுங்கள் என்று கூறி யிருந்தேன் அல்லவா? ஏன் என்னை விட்டுச் சென்றீர்கள் என்று குருவிடம் சற்று கோபத்தோடு கேட்க,

குருவும், சரி, நாளை காலையில் கூட்டி செல்கிறேன் என்று கூறினார்.

மறுநாள் காலையில் மீண்டும் சா யிநாதரின் தரிசனத்திற்கு புறப்படும் போது, அந்த பெண்மணி, குருவிடம் சாய்ராம் தரிசனம் முடித்ததும் அப் படியே மருத்துவரிடம் செல்லலாமா? என்று கேட்க, குருவோ சிரித்துக் கொண்டே, மருத்துவரே சாயி தானம்மா, பாபாவை விட வேறு பெரிய மருத்துவர் இந்த உலகத்தில் உண்டா என்ன? என்று கேட்க,

அதற்கு அந்தப் பெண்மணி, அப்படியானால் உங்களுக்கு மட்டும் பாபாவைப் பார்த்ததும் குணமாகிவிட்டது. எனக்கும்தான் பல ஆண்டுகளாக முழங்கால் வலி இருக்கின்றது.எனக்கு ஏன் குணமாகவில்லை என்று கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு குரு அவர்கள், எனக்கு பாபாவின் மேல் மட்டும் நம்பிக்கை.

உங்களுக்கு பாபாவைத் தவிர மற்ற அனைத்தின் மீதும் நம்பிக்கை. நான் பேசுவது உங்கள் அறிவிற்கு ஒத்துவராதது போல் தோன்றும். உண்மைதான். ஞானிகள் கூறும் இறைநிலை என்பது மனித அறிவிற்கு எட்டாதது. அதை அறியும் அளவிற்கு நமக்கு ஞானமில்லை. எனவே அதை எண்ணி குழப்பமடையத் தேவையில்லை.

வாழ்க்கையை எளிமையாகப் பாருங்கள். உங்களது வாழ்க்கையில் நடைபெறும் அனைத்து சம்பவங்களுக்கும் சாயிநாதனே பொறுப்பு என்ற சரணாகதி வந்துவிட்டால் அவரைத்தவிர வேறு ஒருவரிடம் உங்கள் மனம் எப்படிப் போகும். அப்படியே போனால் அது சரணாகதியாகுமா?

எனக்கு கடந்த ஒரு மாத காலமாக ஏற்பட்டிருக்கும் மூட்டுவலியை, நான் பரிபூரணமாக நம்பும் என் இறைவனான சாயி என் கர்மாவின் பொருட்டு எனக்கு கொடுத்திருக்கின்றார். எல்லா காரியங்களுக்கும் ஒரு காரணம் இருக்கும். எனது காரியத்திற்குண்டான காரணத்தை என் இறைவனான சாயியே அறிவார். என் கர்மவினை நீங்கும்போது அதை அவரே நீக்குவார் என்பது எனது பரிபூரண நம்பிக்கை. அவர் அதை நீக்கும்வரை நான் பொறுமையாக இருக்க வேண்டும்.

சாதாரண அரிசி உண்ணும் அளவிற்கு சோறாக வேண்டும் என்றால் பதினைந்து நிமிடம் வேகவைக்க வேண்டும். பசிக்கிறதே என்று அவசரப்பட்டு பத்து நிமிடத்தில் இறக்கி உண்டுவிட்டால் அப்போதைக்கு பசி ஆறிவிடும். ஆனால் அடுத்த மூன்று மணிநேரத்தில் சரியாக



செரிக்காமல் வயிற்றில் பிரச்சனை ஆரம்பித்து விடும். ஆகவே பொறுமை மிக அவசியம் என்று கூறினார்.

சாயி, கலியுகத்தின் கண்கண்ட தெய்வம். நமது பிரச்சனை எவ்வளவு பெரியதாக இருந்தாலும். சாயியின் முன்னால் நின்று, எள்ளவும் சந்தேகமின்றி அவரிடம், பரிபூரண சரணாகதி ஆகிவிட்டால், எவ்வளவு பெரிய பிரச்சனைகள் என்றாலும் ஒரு நொடியில் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்துவிடும் என்பதே உண்மை.

லீலை: 13. சாயி வாங்கிய தட்சணை.

சில ஆண்டுகளுக்கு முன்பாக நாங்கள் குடும்பத்துடன் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள எங்களது சொந்த கிராமத்திற்குச் சென்றிருந்தோம். நாங்கள் ஊருக்கு வந்ததைக் கேள்விப்பட்ட பக்கத்து ஊரைச்சேர்ந்த குருவின் சிஷ்யை ஒருவர் அவரது தாயாரிடம்

அன்னதானத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தனுப்பியிருந்தார்கள்.

அவர்களது தாயார் எங்களது ஊரைச் சேர்ந்தவர். அவரும் பாபாவின் பக்தை. ஆனால் சற்று ஏழ்மை நிலையில் இருப்பவர். பணத்தை எடுத்துக் கொண்டு எங்களது வீட்டிற்கு வந்து பணத்தை குருவிடம் கொடுத்துவிட்டு, அவர்களது வீட்டிற்கு திரும்புகையில், நம் மகள் பாபாவின் அன்னதானத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுத்திருக்கின்றாள்.

நாமும் பாபாவின் அன்னதானத் திற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கின்றார். ஆனால் நம்மிடம் அவ்வளவு பணம் இல்லை. தற்சமயம் ஐம்பது ரூபாய்தான் உள்ளது. அதை எப்படிக் கொடுப்பது. என்று தயங்கியவாறே அவர்களது வீட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

மறுநாள் அதிகாலை மூன்று மணியிருக்கும்.கடுமையான மழை பெய்து கொண்டிருக்க, அவர்களது வீட்டின் கதவு தட்டப்பட்டிருக்கின்றது. மின்சாரம் வேறு இல்லை. வீட்டில் அந்த அம்மா மட்டும்தான். இந் நேரத்தில் யாராக இருக்கும் என்றவாறே கை விளக்கை எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தால் வாசலில் நீண்ட அங்கியும் தலை யில் தலைப்பாகையும் அணிந்த இஸ்லாமியப் பெரியவர் ஒருவர் மழை யில் நனைந்தவாறு நின்றிருக்கின்றார்.

இவர் கைவிளக்கை அவரின் முகத்தில் அடித்து என்னவேண்டும் என்று கேட்க, அவரோ, பக்கத்தில் உள்ள ஒரு ஊரின் பெயரைச் சொல்லி, அங்கிருந்து வருகின்றேன். பசிக்கின்றது. ஐம்பது ரூபாய் இருந்தால் கொடுங்களேன் என்று கேட்க, இவரோ, சற்று பொறுங்கள் என்று வீட்டிற்கு உள்ளே ஓடி இருட்டில் கைப்பையை தேடி ஐம்பது ரூபாயை எடுத்துவந்து பார்த்தால் வாசலில் அந்த மனிதரைக் காணோம்.

மழை விட்டிருக்க, அவர் கைவி ளக்கை அடித்தபடி தெருமுழுக்க தேட எங்கேயும் அவரைக் காண வில்லை.என்ன அதிசயம். அந்த அம்மா ஐம்பது ரூபாயை தன் கைக ளிலேயே இறுக்கிப் பிடித்தபடி பொழுது விடிந்ததும் எங்கள் வீட்டிற்கு ஓடிவந்தார்கள்.

வந்தவர்கள், குருவைப் பார்த்ததும், இரவு நடந்ததை கூறி, என்னிடம் ஐம்பது ரூபாய் தான் இருக்கின்றது என்று மனதிற்குள் தான் நினைத்தேன் சாய்ராம். ஆனால் என்ன அதிசயம் வந்தவர் பாபாவைப் போல் உடை யணிந்திருந்தார். என்னிடம் பசிக்கிறது ஐம்பது ரூபாய் கொடு என்று கேட்டார் சாய்ராம். எடுத்து வருவதற்குள் மாயமாய் மறைந்து விட்டார். அப்படி யானால் பாபாவே என் வீட்டிற்கு வந்துவிட்டாரா சாய்ராம் என்றார் உணர்ச்சிவசப்பட்டவராக

தான் கைகளில் வைத்திருந்த ஐம்பது ரூபாயை குருவிடம் கொடுத்து அன்னதானத்திற்கு என் பங்கை கொடுத்துவிட்டேன். பாபா எனது ஐம்பது ரூபாயை அன்னதானத்திற்கு ஏற்றுக்கொண்டார் என்று ஆனந்தமாக கூறிச் சென்றார்கள்.

அடுத்த மாதம் நமது சாய் தியானாலயா பிரார்த்தனை மையத்தில் "சாயி மகராஜ் குருவைதேடி" ஆன்மீக மாத இதழ் ஆரம்பிக்கப்பட்ட லீலையை கூறுகின்றேன்.

- தொடரும்...



பைரவ சாய் பீடம்

மேல காரைக்காடு, திருநாராயணபுரம் - 621203
தொட்டியம் வட்டம், திருச்சி மாவட்டம், தமிழ்நாடு
Cell : + 91 9976919106, 6380762294, www.bairavasaipeedam.com

கெடு பலன்களை குறைக்கும் - காரிய தடைகளை நீக்கும்
– வாழ்வில் சுபிட்ஷங்களை உண்டாக்கும்

ஜென்ம நட்சத்திர துனி ஹோமம்

கணபதி – சாய்பாபா - நவகிரஹம் – சத்ய நாராயணா – லலிதா – ஹனுமான் – நரசிம்மர் – லட்சுமி ஹயக்ரீவர் – அஷ்ட பைரவர் – சொர்ண பைரவர் – லட்சுமி குபேரர் - ம்ருத்யுஞ்சாய – தன்வந்தரி – ஆயுஸ் ஹோம மந்திரங்களாலும் - உங்கள் நட்சத்திர அதி தேவதை மந்திரம் – நட்சத்திர சிவ மந்திரம் – நட்சத்திர மந்திரம் - நட்சத்திர சித்தர் மந்திரங்களால் இந்த துனி ஹோமம் தினசரி நடைபெறுகிறது.

மாத காணிக்கை ஒரு நபருக்கு Rs. 350 முன் பதிவிற்கு 9976919106 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு "துனி ஹோமம்" என மேசேஜ் செய்யவும்.

உங்கள் வாழ்வில் உள்ள தொடர் துன்பம் வறுமை நோய் கடன் திருமணம் புத்திரபாக்கியம் கணவன் மனைவி குழந்தைகள் வேலை தொழில் சொத்து போன்ற எந்த ஒரு தீராத எந்த பிரச்சனைகளுக்கும் 90 நாட்களில் தீர்வு கண்டிட – இனி வரும் பிரச்சனைகளை தடுக்க - வாழ்க்கைக்கு தேவையான சரளமான புண புழக்கம் உண்டாக – வாழ்நாள் முழுவதும் இறை பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி பெற்றிட – கர்மா குறைந்திட - ஏழரை சனி ஜென்ம சனி பாத சனி விரைய சனி அட்டம சனி அர்த்தாஸ்ட்டம சனி கண்ட சனி சனி புத்தி சனி திசை நடப்பவர்கள் - நவகிரஹங்களால் பாதிப்பு உள்ளவர்கள் தலைக்கு வருவது தலைப்பாகையோடு போகச் செய்ய - பொருள் சேதம் உயிர் சேதம் தவிர்க்க இன்றே பைரவ கல்பம் உபதேசம் பெற்றிடுவீர்

உபதேசம் பெற 9976919106 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு "பைரவ கல்பம்" என மேசேஜ் மட்டும் அனுப்பி உபதேசம் பெற்றுக் கொள்ளலாம்.
இது இலவச சேவையே

தொடர் –53

குருவைத் தேடி

எனக்கென்னவோ பாபாஜியே எனக்கு "ஒரு யோகியின் சுய சரிதம்" புத்தகத்தை அளித்ததுபோல் இருந்தது. பிறகு இருவரும் நடந்த வைகளை வியந்தபடி பேசிக்கொண்டு இரவு 10 க்கு ஊர்வந்து சேர்ந்தோம்.

அதற்குப்பின்பாக என்னுடைய சற்குருவின் தேடல் மிக அதிகமாகத் தொடங்கியது. தொடர்ந்து திருவண்ணாமலை சென்று என் பழைய ஞாபகங்களையும், பழைய ஆன்மீக நட்புக்களையும் புதிப்பித்துக் கொண்டேன்.

மிக நன்றாக நடந்து கொண்டி ருந்த எங்களுடைய வியாபாரம் மந்தமாய் செல்ல ஆரம்பித்தது. நாளாகநாளாக படு மோசமடைந்தது. மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து வரும் மூலப் பொருட்கள் தட்டுபாடு ஏற்பட்டதால் எங்களது வியாபாரம் தடைபட்டது. மூலப் பொருள் தட்டுப்பாட்டால், மகாராஷ்டிர கவர்மெண்ட் எங்களது வியாபார ஒப்பந்தத்தை ரத்து செய்ததால் நண்பர் ஜெகதீஷ் திரும்ப மும்பை செல்ல நேர்ந்தது.

வியாபார நிமித்தம் சில காலம் மறந்து போன எனது சற்குருவின் தேடுதலை எனக்கு ஞாபகப்படுத்த வந்தவர் போல் நணபர் ஜெகதீஷ் என்னிடம் சிலகாலம் வந்து பழகிவிட்டு, உடனே என்னை விட்டு விலகியது ஏதோ எதேச்சையாய் நடந்ததாக என்னால் ஏற்றுக் கொள்ள



முடியவில்லை.

அக்காலகட்டத்தில் எனக்கு நடக்கும் ஒவ்வொரு ஆன்மீக சம்பவங்களும், சற்குருவை நானாகத் தேடவில்லை என்பதை மட்டும் மிக நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது. ஏன் என்றால் அவர்களின் அருள் இன்றி நாம் சிறு துரும்பைக்கூட அசைக்க முடியாது.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி" என்ற வாக்கினுக்கேற்றார் போல்தான் அனைத்து சம்பவங்களும் நடைபெற்றன.

தொடர்ந்து நடந்த சம்பவங்களில் உச்சம் தொட்ட சம்பவங்கள் ஓரிரெண்டைக் கூறுகின்றேன். நண்பர் ஜெகதீஷ் என்னைவிட்டுச் சென்றபின், வேறு இடங்களில் இருந்து மூலப்பொருட்களை இறக்குமதி செய்து மீண்டும் பழைய வியாபாரத்தை பிடிக்க கடினமாக முயற்சி செய்து கொண்டிருந்தபோது ஒரு நாள்.

அதிகாலை 2 மணியில் இருந்து மதியம் 4 மணிவரை கடினமாக உழைத்ததால் என்னால் சரக்கு அனுப்பிய கடைகளுக்கு வசூலுக்கு செல்ல முடியவில்லை. ஆகையால் கடையில் இருந்த மேஸ்திரி ஒருவரை வசூலுக்கு அனுப்பிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டேன்.

இரவு இரண்டு மணிக்கெல்லாம் கடையில் இருந்து வேலையாட்கள் என்னை அழைத்து வசூலுக்குச் சென்ற மேஸ்திரியை காணவில்லை என்ற தகவலை கூற, நானோ எங்காவது பேரூந்து தாமதமாகி இருக்கும் வந்துவிடுவார் என்று கூற, வேலையாட்களோ, மேஸ்திரி இரவு வந்து எங்களுடன்தான் படுத்திருந்தார். காலையில் எழுந்து பார்த்தபோது ஆளைக்காணவில்லை என்று கூற, நானும் பதட்டமில்லாமல், அருகில் வேறு ஏதாவது கடையில் உறங்கிக்கொண்டிருப்பார். தேடிப்பாருங்கள் என்று கூறிவிட்டு உடனே புறப்பட்டு கடைக்குச் சென்றேன்.

அதற்குள் வேளையாட்கள் மேஸ்திரியைப் பற்றி முழுமையாக விசாரித்து வைத்திருந்தார்கள். முதல்நாள் வசூல் செய்த ஒரு பெரும் தொகையுடன் மேஸ்திரி ஓட்டம் பிடித்துவிட்டார் என்ற தகவலைக் கூறினார்கள்.

எனக்கு சற்று நேரம் ஒன்றும் புரியவில்லை. காலை 3 மணியாகி விட்டதால் வியாபாரம் ஆரம்பமாகிவிடும். இந்த நேரத்தில் ஓடினவனைத் தேடுவதா? வியாபாரத்தைப் பார்ப்பதா? சற்று நேர குழப்பத்திற்கு பின்பு மேஸ்திரியின் உடமைகள் இங்கு என்ன இருக்கின்றது என்று கேட்டேன்.

வேளையாட்கள் அவருடைய டிராவல் பேக் ஒன்றை எடுத்து வந்து கொடுத்தார்கள். நான் அதை கையில் வாங்கி பிரித்துப் பார்க்கின்றேன். அந்தப் பேக்கின் உள்ளே ஓரே ஒரு புகைப்படத்தைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை. நான் அந்த புகைப்படத்தை வெளியில் எடுத்துப் பார்க்கின்றேன்.

அது ஒரு அடி உயரம் உள்ள சாய் பாபாவின் புகைப்படம். புகைப் படத்தை பார்த்தவுடன் என் மனதிற்குள் ஏதேதோ எண்ணங்கள். நிலையற்ற செல்வத்தை தேடும் உன்னை நான் நிலையான செல்வத்தை தேட வைப்பதற்கு இன்னும் என்னென்ன லீலைகளை நடத்தவேண்டும் என்று கேட்பது போல் இருந்தது.

பாபாவை நான் அப்போது சற்குருவாக ஏற்கவில்லை. ஆனால் இந்நிகழ்வு அதற்கு அடித்தளமாய் இருந்தது என்பது உண்மை. பாபாவின் படத்தையே சில நிமிடங்கள் பார்த்துக் கொண்டே இருந்தேன். எனது மேலாளர் வந்து என் தோளைப் பிடித்து உழுக்கிய போதுதான் நான் சுய உணர்விற்கு வந்தேன்.

என்ன சார்! பாபா படத்தையே பார்த்துக் கொண்டு இருக்கின்றீர்கள். இப்பொழுது என்ன செய்வது என்று சொல்லுங்கள். போலீசில் புகார் கொடுத்து விடுவோமா? சிறிய தொகை என்றால் விட்டுவிடலாம். பெரிய தொகை சார் என்றார்.

நான் உடனே அவரை மறுத்தேன். வேண்டாம். இந்தப் பிரச்சனையை இத்தோடு விட்டுவிடுங்கள். போய் வியாபாரத்தைப் பாருங்கள். என்று அனைவரையும் அனுப்பிவிட்டு, மீண்டும் அந்தப் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

எனக்குச் சேரவேண்டிய பெரும் தொகை என்னைவிட்டுப் போய் விட்டது. அதற்கு காரணமாவரின் பேக்கில் பாபாவின் புகைப்படம். அந்த நேரத்தில் எனக்கு பாபாவைப் பார்த்து வெறுப்புத்தான் வரவேண்டும். ஆனால் அதற்கு மாற்றாக, ஏனோ அவரின் மீது எனக்கு ஏதோ ஒரு அன்பு ஊற்று பெருக்கெடுத்ததை நான் நன்கு உணர்ந்தேன்.

பணத்தை எடுத்துக் கொண்டு மாயமானவரின் மேலும் எனக்கு கோபம் வரவில்லை. மாறாக எனக்கு அவர் ஏதோ ஒரு விதத்தில் உதவி செய்ததாகவே என் மனதிற்குப் பட்டது.

சுதந்திரம் கிடைத்தது போல் மனம் லேசாகிப்போனது.

மெய்பொருள் இன்னதென்று அறி யாமல், பொய்பொருளை தேடியவன், பொய்பொருளே மெய் பொருளென கொள்வான் அல்லவா? அவ்வாறான மெய்பொருளை, பொய்பொருளென கண்டு கொள்வதற்கே வாழ்வியலில் ஏற்றத்தாழ்வுகளை வைத்ததாம் இறை.

எ ன மே வ எ ன க் கு ள் ளி ரு ந் த மெய்பொருளைப்பற்றிய தேடல், பொய்பொருளாகப் போகாமல், மெய்பொருளாய் வெடித்துக் கிழம்பிய தருணம் அது. ஆகவே அந்த சமயத்தில் எனக்குள் இருந்த மெய்பொருள் என்னை அமைதிக்கு இட்டுச் சென்றது. இந்நிகழ்விற்குப் பின் எனது வியாபார ஆர்வம் என்னைவிட்டு விலகுவதை அடுத்து வந்த மாதங்களில் நானே கவனித்தேன்.

இந்நிகழ்விற்கு இரு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் அதிகாலை 4 மணி. நான் கடையில் அமர்ந்திருக்கின்றேன். எங்கள் கடைக்கு காவியுடை அணிந்த குள்ளமான ஒரு சாமியார் வருகின்றார் நீண்ட தாடி, பளிச்சென்ற முகம். ஜோல்னா பை அணிந்து கொண்டு எங்கள் கடைக்குள்ளாக வந்து எனது முன்னாள் நின்று "அல்லா மாலிக்" என்றார்.

நான் அவரை நிமிர்ந்து பார்த்து கடைக்கு வந்த கஸ்டமர் என நினைத்து என்ன வேண்டும் என்றேன்.

அவரோ, மராட்டியில் நீங்கள் தான் வேண்டும் என்றார். தொடர்ந்து. என்ன மாதிரி பிச்சைக் காரனுக்கு என்ன வேண்டும் உன்னமாதிரி ஆளோட நட்புதான் வேண்டும் என்கிறார்.

அதெல்லாம் சரிதான்! இப்போது உங்களுக்கு என்ன வேண்டும். என்று மீண்டும் கேட்டேன். நான் கேட்பதை உங்களால் தரமுடியுமா? என்று கேட்டவர். மேசையில் சாமி படத்தில் இருந்த காய்ந்த பூக்களை எடுத்து என்னை நோக்கி கை நீட்டு என்றார்.

நானும் கையை நீட்ட, அந்த காய்ந்த பூவை என் கைகளில் போடுகிறார்.

பூ என் கைகளில் விழுந்ததை நான் என் கண்களால் பார்த்தேன். நான் பார்த்துக் கொண்டிருந்தபோதே, அந்த பூ "உதி"யாக மாறி என் கைகயை சுட்டது. ஆம் அந்த "உதி" சூடாக இருந்தது. அது ஏன் சூடாக இருந்தது என்பது அப்போது எனக்கு தெரியாது.

நான் உடனே சற்று பயந்து அந்த உதியை மேசையின் மீது கொட்டிவிட்டேன். அவர், அதை எடுத்து நெற்றியில் பூசிக்கொள் என்றார்.



சுவாமிகள் எழுதிக் கொடுத்த
முகவரிச் சீட்டு

நான் அதைக் கவனிக்காதது போல், அதெல்லாம் சரிதான். உங்களுக்கு இப்போது என்ன வேண்டும் அதை சொல்லுங்கள் முதலில் என்றேன்.

நான் இதைப்போன்று பிளாக் மேஜிக் செய்யும் நிறைய சுவாமிகளை சந்தித்திருப்பதால் இதையும் நான் பிளாக் மேஜிக்காகவே பார்த்தேன். ஆகையால் நான் அந்த உதியை எடுத்துக் கொள்ளவில்லை.

அவர், சரி அப்படியானால் நான் கேட்கிறேன். நீ சீரடிக்கு வரவேண்டும் என்றார். சேற்றில் புரள்வதே ஆனந்தம் என்று சேற்றுக்குள் தன் உடலை அமிழ்த்தி புரண்டு கொண்டிருக்கும் பன்றிக்கும், லெகிகத்தில் புரண்டு கொண்டிருக்கும் மனிதனுக்கும் இறைவனின் அழைப்புகள் புரிவதில்லை. எனக்கும் மட்டும் எப்படி புரியும்.

அவர் என்னை சீரடிக்கு வரவேண்டும் என்றதும் எனக்கு சிரிப்புதான் வந்தது. யோவ் யார்யா நீ! என் நிலமை என்ன என்று உனக்குத் தெரியுமா? இங்கிருப்பதை எல்லாம் விட்டுவிட்டு என்னால் ஒரு நிமிடம் கூட எங்கேயும் செல்ல முடியாது. இதில் சீரடிக்கு வா என்கிறாய். என்று மனதிற்குள் நினைத்துக் கொன்டேன்.

நான் மனதிற்குள் நினைத்ததை தெரிந்து கொண்டவர்போல் என்னைப் பார்த்து லேசாக சிரித்துக் கொண்டார். பிறகு, சரி, உனக்கு இன்னும் சில விசயங்கள் புரியவில்லை. அடுத்த வருடம் நீ சீரடியிலேயே இருக்கப் பிரியப்படுவாய். என்று கூறிவிட்டு அப்படி நீ வந்தால் என்னை வந்து பார் என்றார்.

அப்படியானால் நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என்றேன். நான் சீரடியில் தான் வசிக்கின்றேன். என் பெயர் இராமதாஸ் பாபா. சந்தேகம் இருந்தால் ஒரு காகிதம் கொடு என் விலாசத்தை எழுதித் தருகின்றேன் என்றார். நான் காகிதத்தையும், பேனாவையும் அவர் முன் நீட்ட அவர் அதை வாங்கி அவரது முகவரியை எழுதிக் கொடுத்தார்.

முகவரியை மராட்டியில் எழுதியிருந்தார். அதை உடனே என்னால் தெரிந்து கொள்ள முடிய

வில்லை. பிறகு தெரிந்து கொண்டதில் அதில், இராமதாஸ் பாபா சீரடி சாயி சமஸ்தான், சமாதி மந்திர், சீரடி என்று எழுதியிருப்பதை தெரிந்து கொண்டேன்.

சிறிது நேரம் கழித்து எனக்கு தண்ணீர் வேண்டும் என்றார். நான் தண்ணீர் எடுத்துக் கொடுத்தேன். அதை குடித்தவர். சரி நான் புறப்படுகின்றேன். நாங்கள் இராமேஸ்வரம் செல்வதற்காக நூறு பேர் சீரடியில் இருந்து வந்திருக்கிறோம். தற்போது மயிலாப்பூர் பாபா கோவிலில் தங்கி இருக்கின்றோம். எங்களுக்கு மதிய உணவுக்காக ஒரு நபருக்கு பத்து ரூபாய் வீதம் நூறு பேருக்கு ஆயிரம் ரூபாய் நீ தர வேண்டும் என்றார்.

உடனே நான், என்னது ஆயிரம் ரூபாயா? அதெல்லாம் முடியாது. உங்களைப் போல் பத்து நபர்கள் எங்களது கடைக்கு தினந்தோறும் வருகின்றார்கள். எல்லோருக்கும் தர வேண்டும் அல்லவா? ஒருவருக்கே ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டால் அவர்களுக்கு எப்படிக் கொடுப்பது. அதனால் என்னால் முடிந்தது 200 ரூபாய் தான் இந்தாருங்கள் என்று எடுத்துக் கொடுத்தேன்.

ஆனால் அவர் பிடிவாதமாக ஆயிரம் ரூபாய்தான் வேண்டும் என்று கூற நான் இன்னும் நூறு ரூபாய் கொடுத்து என்னால் அவ்வளவுதான் முடியும். இதை வாங்கிக்கொண்டு போய் வாருங்கள் என்றேன். உடனே அவர் அதை எடுத்துக் கொண்டு என் தலையில் கை வைத்து ஆசீர்வதித்துச் சென்று விட்டார்.

நான் அந்த நிகழ்ச்சியை அன்றோடு மறந்து விட்டேன். ஏனென்றால், எங்களது கடைக்கு தினமும் இதைப் போன்று ஓரிரெண்டு நபர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அவர்க ளோடு இவரையும் சேர்த்து மறந்து போனேன்.

- தொடரும்...

அப்துல் பாபாவின் குடில்!

சாவடிக்கு எதிர்புறத்தில் இந்தக் குடில் இருக்கிறது. அப்துல் பாபா எல்லா விதமான வேலைகளையும் செய்து வந்தார். பணம் இல்லாத காரணத்தால் உணவுக்காக பிட்சை எடுத்தார்.

பாபாவின் உத்தரவுகளை வார்த்தைகள் பிசகாமல் நிறை வேற்றுவார். பாபா அவரிடம் மிதமாக சாப்பிடு, குறைந்த நேரமே உறங்கு என்பார். எங்கெங்கு இடம் கிடைக்கிறதோ அங்கெல்லாம் உறங்கினார். பிறகு களிமண்ணால் ஆன குடிசையைக் கட்டினார். அது தான் நாம் இன்று பார்க்கும் அப்துல்லாவின் குடில்.



பாபாவிற்கு குளிப்பதற்கு தண்ணீர் எடுத்து வைப்பது, அவரது கப்னியை தோய்ப்பது, பாபா செல்லும் இடங்களில் உள்ள பாதையை சுத்தம் செய்வது போன்ற வேலைகளை பார்த்து வந்தார். பாபா காலையிலும், மாலையிலும் லெண்டி தோட்டத்திற்கு செல்லும்போது அவருடன் கூடவே செல்ல அனுமதி பெற்றிருந்தார்.

பாபாவின் பழைய புகைப்படங்கள், பாபா உபயோகப்ப டுத்திய சிம்டா, சட்கா போன்றவற்றை இந்த குடிலில் காணலாம். ஒரு தகரக் குவளையும் பாபா இவருக்கு வழங்கினார்.

ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

பாதுகை



துவாரகாமாயிக்குள் அடுப்பு இருக்கும் இடத்திற்கு அருகில் உள்ள மண் சுவற்றில் சாய்ந்து கொண்டு சுவற்றில் ஒரு கையை வைத்தவாறு அந்த வழியாகச் செல்லும் கிராம மக்களை நிறுத்தி அவர்களது குடும்ப நலன்களை பற்றி விசாரிப்பது பாபாவின் தினசரி பழக்கம்.

அவர் எங்கு நின்று கொண்டிருந்தாரோ அந்த இடத்தில் ஒரு சிறு மண்டபம் போன்ற அமைப்பை ஏற்படுத்தி அதற்குள் பாதுகை ஒன்றை வைத்திருக்கிறார்கள். சுவரில் எந்தப் பகுதியில் கையை வைத்திருந்தாரோ அந்த இடத்தில் ஒரு பாதுகையையும் பிரதிஷ்டை செய்து இரண்டையும் புனிதமாகக் கருதி அவற்றை கைகளால் தொட்டு மக்கள் வணங்குகிறார்கள்.

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG. REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

தொடர் –17

சாய் சரவணன்

"அதி தேவதை"



அப்துல் பாபாவைப் பார்த்து ஆயி, உனக்கு யாரும் இல்லை என்று கவலை கொள்ளாதே! உன்னை நான் பார்த்துக் கொள்கின்றேன். இனி நீ என்னுடன் பிருந்தாவனத்திலேயே தங்கிக்கொள்ளலாம் என்று கூறினாள்.

தாயின் பாசத்தை அறியாமலேயே வளர்ந்து வந்த அப்துல்லாவிற்கு அன்று முதல் தாயானால் ஆயி. அதன்பிறகு ஆயி பாலாஜியை நோக்கி கூறினாள். உனது சேவை மிகவும் புனிதமானது. என் குரு மகராஜ் நடக்கும் பாதையை சுத்தம் செய்கிறாய். இனிமேல் அந்தப் பணியை நானே மேற்கொள்கிறேன்.

சாயியே என் பிரபு, அவரே என் பதி, அவரே பாண்டுரங்கன். என் ஆத்மபந்து, குரு, உற்றார், பெற்றோர், என் ஆத்ம பலமே அவர்தான். அத்தகைய அவதாரப் புருஷர் வாழும் இந்த சீரடி மண்ணின் மகத்துவத்தை மக்கள் சரிவரப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றாரகள்.

இனிவரும் காலங்களில் மக்கள் நமது சீரடி சாயி தெய்வத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் இணைந்து சேவையாற்ற வேண்டும். இனி நீங்கள் இருவரும் காலம் நேரம் இரண்டையும் விரயம் செய்யாமல் சற்குருவின் சேவையில் முழுமனதோடு ஈடுபடுங்கள்.

அவருக்கு நாம் செய்யும் சேவையானது மனிதப்பிறவியின் தீவினையை அறுத்து நமது பிறவியை கடைந்தேற்றும். நம் வாழ்வில் எது வேண்டுமானாலும் வரலாம். துன்பங்கள் கடல் அலை போல் தொடர்ந்து வரலாம். எது வரினும் நமது சாயி சேவையினை மட்டும் எக்காரணம் கொண்டும் நாம் நிறுத்திவிடக்கூடாது என்றெல்லாம் அவர்களிடம் எடுத்துக் கூறினாள்.

அன்னை ஆயியின் அன்பையும், பிரேமையையும் உணர்ந்த இருவரும்

ஆயியைப் பின்பற்றி கண்டிப்பாக இனி ஒய்வில்லாமல் சாயி சேவையில் ஈடுபடுவோம் என்று உறுதியளித்து ஆயியை நமஸ்கரித்தனர்.

மேலும் சாயிநாதரை போல பிறர் மனதை அறியும் ஆற்றல் ஆயிக்கும் இருந்ததை எண்ணி வியந்தனர். அன்று முதல் அப்துல், ஆயியின் அரவணைப்பில் பிருந்தா வனத்திலேயே தங்கினார்.

அன்னை, ஸ்ரீ சாயிநாதரின் அருள் பார்வையால் தன் இலக்கை அடைந்து சாயிநாதரோடு அத்வைத பாவத்தோடு ஒன்று கலந்து பிரேமையில் மூழ்கியிருந்தாலும், தான் அவதரித்ததன் நோக்கம் என்னவென்று உணர்ந்தாள். தன் உள்ளுணர்வால் பாபாவோடு உரையாடி செய்யவேண்டிய பணிகளை செய்து முடிக்க வேண்டும் என்று சங்கல்பம் கொண்டாள்.

உண்மையில் சாயிநாதரோடு, அன்னை வெளிபுறமாக ஒருபோதும் பேசியதே இல்லை. துவாரகாமாயியில் இருந்து சற்று தள்ளி அன்னை வசித்த "சாலா" இருந்தாலும், தியானத்தின் மூலமாகவே அன்னை பாபாவிடம் தொடர்பு கொள்ளும் விதம் அசாத்தியமானது.ஆச்சர்யப்பட வேண்டியது.

சாயிநாதரிடம், அன்னைக்கு இருந்த பக்தியின் உச்சநிலையை இன்று நாம் உணர்ந்து கொள்ள வேண்டுமானால், தேவாரப்பாடலில் அப்பர் பெருமானின் பாடலை நினைவிற்கொள்ள வேண்டும்.

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்

மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்

பின்னம் அவனுடைய ஆரூர் கேட்டாள்

பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்

அன்னையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்தே ஆசாரத்தை

தன்ன மறந்தாள் தன் நாமங்கெட்டாள்

தலைப்பட்டாள் நங்கை தலைவன் றானே.

தேவாரம் 6 ம் திருமுறை 258 வது பாடல்

இப்புனிதமான தேவாரப்பாடல் நம் அன்னைக்கு மிகச்சரியாகப் பொருந்தும். அப்பரின் கூற்றுப்படி, பக்தியின் பித்து ஒருவனை என்ன வேண்டுமானாலும் செய்யத் தூண்டும். சாயிநாதரின் மீது அன்னைக்கு இருந்தது அவ்விதமான பக்தி!

அதற்கு அனன்ய பக்தி, மதுர பக்தி என்று என்ன பெயர் வேண்டுமானாலும் வைத்துக் கொண்டாலும் அது அன்னைக்கு மிகச்சரியாகவே பொருந்தும். சதா நேரமும் மீரா பாயைப் போல ஸ்ரீ சாயி கிருஷ்ண சிந்தனையில் லயித்துப் போய் மூர்ச்சையாவதும் உண்டு.

பக்தியின் வாசனையையே அறியாத சில மக்கள் அன்னையைப் பற்றி தவறாக எண்ணியதும், பேசியதும் உண்டு.

அன்னை தன் "சாலா"வான பிருந்தாவனத்தை விட்டு அவ்வளவாக வெளியே வரமாட்டாள். அவள் வீட்டை விட்டு வெளியே வருவது என்பது துவாரகாமாயியில் வாழும் பகவான் ஸ்ரீ சாயி கிருஷ்ணனை தரிசித்து அவரின் முன் மனதை உருக்கும் பாடல்களைப் பாடுவதற்காக மட்டும் தான்.

சில நாட்களில் பாடல் பாடிக் கொண்டிருக்கும் போதே பக்தியில் மூழ்கி மூர்ச்சையாகிவிடுவாள். ஒரு சில நாட்களில் பித்துப் பிடித்ததுபோல பாபாவின் பின்னாலேயே, மகராஜ், மகராஜ் என்று கூப்பிட்டபடியே செல்வாள். அப்படிச் செல்கையில் சீரடியின் தோற்றம் அவளை சிந்திக்கும்படி செய்தது.

சீரடி மக்களின் அறியாமை,



அசுத்தம் நிறைந்த வீதிகள், நாற்றம் எடுக்கும் பன்றியின் மலம், சாக்கடை, குப்பை மேடுகள், சுகாதாரக்கேடுகள், லெண்டித்தோட்டத்தின் நடுவே ஓடும் சாக்கடை நீர். பகவான் ஸ்ரீ சாயிநாதர் நடந்து செல்லும் பாதையோ சுத்தம் இன்றி, பள்ளம் மேடுகளாகவும், கல்லும் முள்ளுமாக பாபாவின் திருவடியை காயப்படுத்தும்படி கிடப்பதைக் கண்டாள்.

பரமாத்மா வாழும் இடத்தின் நிலை கண்டு மனதிற்குள் நினைந்து கண்ணீர் விடுவாள் அன்னை. பிறகு தன்னைத்தானே தேற்றிக்கொண்டு, என் பரமாத்மாவான சாயி வாழும் இந்த சீரடியை பிருந்தாவனமாக மாற்ற வேண்டும் என்று மனதிற்குள் மகா சங்கல்பம் செய்து கொண்டு தியானத்தில் அமர்ந்தாள்.

அடிப்படை வசதிகூட இல்லாத சீரடி கிராமம் பண்டரிபுரமாக மாற வேண்டும் என்பதே அன்னையின் சங்கல்பம். சத்புருஷர் வாழும் இடம் மட்டுமின்றி சீரடி கிராமமே சுத்தமாக இருக்க வேண்டும். அப்போதுதான் மக்களும் நோயின்றி சுகாதாரமாக இருப்பார்கள்.

சாயி மகராஜாவின் மகத்துவத்தையும், பெருமைகளையும், அகிலம் உணரும் வகையில் சாயிநாதரின் எளிமையான தர்பார் மிகப்பெரிய ராஜ தர்பாராக மாற வேண்டும். மகாராஜாவான சாயிநாதருக்கும், சமஸ்தானத்திற்கும், பெருமை சேர்க்கும் வகையில் பல திருவிழாக்கள் சீரடியில் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பண்டரிபுரத்தில் நடக்கும், ஸ்ரீ இராம நவமி, கோகுலாஷ்டமி, குருபூர்ணிமா, ஏகாதசி விழாக்கள், ஊர்வலங்கள், பஜனைகள், ஹரி கீர்த்தனங்கள், சத்சங்க வகுப்புகள், நாம சப்தாகங்கள், என அனைத்தும் சீரடியிலும் நடக்க வேண்டும்.

விட்டலனுக்கு பண்டரிபுரத்தில் எடுக்கப்படும், காகட் ஆரத்தி, மதிய ஆரத்தி, இரவு ஆரத்தி, என யாவும் சாயி நாதனுக்கும் எடுக்கப்பட வேண்டும். சாயிபிரபுவிற்கு அனைத்து மக்களும் ஒன்றாகக்கூடி இராஜ உபச்சாரங்கள் செய்ய வேண்டும். பஞ்சோபசாரம், சோடஷ உபசாரம், செய்து மங்கள இசை முழங்க

வழிபாடு நடக்க வேண்டும்.

மகாராஜாவான சாயிக்கு, உயர்ந்த பட்டாடைகள், முத்துமணி மாலை கள், கிரீடங்கள், விலை உயர்ந்த ஆபர ணங்களால் அலங்கரிக்கப்பட வேண்டும். தலைக்கு மேல் வெண் குடை பிடித்து, வெள்ளி சாமரம் வீசி, பதினாறு வகையான நெய்வேத்தி யங்கள் சாயிநாதருக்கு சமர்பிக்கப்பட வேண்டும்.

சாயிநாதரை தரிசிக்க வரும் எந்த ஒரு சீவனும், பசியோடு திரும்பிச் செல்லாமல் இருக்க வேண்டி தினந்தோறும் அன்னதானம் நடத்தப்பட வேண்டும். பகவான் சாயிநாதருக்காக தன் சர்வத்தை யும் சமர்ப்பித்து விடவேண்டும் என அன்னை தீர்மானித்து, எதிர்காலத்தில் சீரடி பண்டரிபுரமாக திகழ வேண்டும் என்பதே அன்னையின் மகாசங்கல்பம் ஆகும்.

அன்னையின் இந்த மகா சங்கல்பம் எதிர்காலத்தில் தற்போது உண்மையானதை நான் இன்று சீரடியில் கண்கூடாகப் பார்க்கின்றோம். சீரடி வைகுண்டமாக மாற வேண்டியும், ஆன்மீக சாம்ராஜ் யத்தின் சக்ரவர்த்தியாக ஸ்ரீ சாயிநாதர் ஆக வேண்டியும், சீரடி மிகப்பெரிய ராஜ சமஸ்தானமாகவும் உருவெடுக்க அனைத்து விஷயங்களையும் செயல்முறைபடுத்த சங்கல்பம் கொண்டாள் அன்னை இராதாகிருஷ்ணாயி.

தன் மங்களமான மகா சங்கல்பத்தை நிறைவேற்ற என்னென்ன யுக்திகளைக் கையாண்டு சீரடியை சாயி சமஸ்தானமாக மாற்றம் செய்திட அன்னை எப்படி எல்லாம் பாடுபட்டாள் என்பதை இனிமேல் காண்போம்.

– தொடரும்

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

தத்தாத்ரேய ஜெயந்தி

இந்துக்களின் முக்கியமான பண்டிகையான தத்தாத்ரேய ஜெயந்தி, மார்கசிர்ஷ (அக்ரஹா யான) மாதத்தின் பௌர்ணமி இரவில் (பூர்ணமாசி) கொண்டாடப் படுகிறது. இது தத்த ஜெயந்தி என்றும் அழைக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டில், தத்த ஜெயந்தி டிசம்பர் 7, 2022 புதன்கிழமை அன்று கொண்டாடப்படுகின்றது.

நாடு முழுவதும் தத்தாத்ரேயர் பிறந்த நாளே ஸ்ரீ தத்த ஜெயந்தி.

சாஸ்திரங்களின்படி, தத்தாத்ரேய பகவான் மும்மூர்த்தி களின் (திரிமூர்த்தி), பிரம்மா (படைப்பவர்), விஷ்ணு (வளர்ப் பவர்) மற்றும் மகேஷ் (சிவன், அழிப்பவர்) ஆகிய மூன்று கடவுள் களின் இணைவைக் குறிக்கிறது. சில சமயங்களில், தத்தாத்ரேயர் விஷ்ணுவின் அவதாரமாகவும் கருதப்படுகிறார்.

குறிப்பாக தென்னிந்தியாவில் தத்தாத்ரேயருக்கு அர்ப்பணிக் கப்பட்ட பல கோவில்கள் உள்ளன. மஹாராஷ்டிரா மாநிலத்திலும் இவர் ஒரு முக்கிய தெய்வம். உண்மையில், புகழ்பெற்ற தத்த சம்பிரதாயம் தத்தாத்ரேயரின் வழிபாட்டு முறைக்கு உயர்ந்தது.

தத்தாத்ரேயருக்கு மூன்று தலைகள் மற்றும் ஆறு கைகள் உள்ளன. தத்தாத்ரேய ஜெயந்தி அன்று, அவரது குழந்தை வடிவம் வழிபடப்படுகிறது. கர்நாடகா, ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் உள்ள தத்தாத்ரேயர் கோயில் களில் இந்த நாள் மிகவும் மகிழ்ச்சி யுடனும், ஆரவாரத்துடனும் கொண் டாடப்படுகிறது.

தத்தாத்ரேயர் ஜெயந்தி நாளில் தத்தாத்ரேயரை முழு பக்தியுடன் வணங்கி, விரதம் இருந்தால், விருப்பங்கள் அனைத்தும் நிறை வேறும் என்பது நம்பிக்கை.



"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

திருவாசகம் பாடிய மணிவாசகர்



பாண்டிய நாட்டில் திருவாதவூர் என்னும் ஊரில் வசித்து வந்த, சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதி என்ற தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகப் பதவியில் அமர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தான். தன் புலமையால் "தென்னவன் பிரமராயன்" எனும் பட்டத்தையும் பெற்றார்.

இவர் பாடிய பாடல்கள் "திருவாசகம்" என அழைக்கப்படுகின்றன. பக்திச் சுவையும் மனதை உருக்கும் தன்மையும் கொண்ட திருவாசகப் பாடல்கள், தமிழில் சிறந்த இலக்கியங்களின் வரிசையில் வைத்து போற்றப்படுகின்றது.

தமிழ் கற்ற மாணவரான ஜி. யு. போப் இதற்குத் தக்க சான்றாவார். "சிறை பெறா நீர் போல் சிந்தை வாய்ப்பாயும் திருப்பெருந்துறையுறை சிவனே" (பா.392) என்பதாலும்,

"இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க." எனும் அடிகளால் தமிழின் அருட் திறத்தையும் வாதவூரரிற்கும் இறைவனுக்குமான நெருக்கத்தையும் உணரலாம். "நரியைக் குதிரைசெய்" எனும் திருநாவுக்கரசர் பாடல் மூலம் இவர் காலத்தால் நாவுக்கரசருக்கு முந்தியவர் எனக் கருதப்படுகிறது.

ஞான நெறியைப் பின்பற்றிய இவர் 32 ஆண்டுகளே வாழ்ந்து ஆனி மாதம் மகம் நட்சத்திரத்தில் சிதம்பரத்தில் முக்தியடைந்தார். இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணிமொழியார், தென்னவன் பிரமராயன் என்ற வேறு பெயர்களும் உண்டு.

உயர்ந்த பதவி, செல்வம், செல்வாக்கு எல்லாம் இருந்தபோதும் இவை வாழ்வின் இறுதி நோக்கமல்ல என்பதை உணர்ந்த திருவாதவூரார் சைவசித்தாந்தத்தை ஆராய்ந்து சிவ வழிபாட்டை மேற்கொண்டு ஒழுகி வரலானார்.

ஒருமுறை பாண்டிய மன்னனுக்குச் சோழநாட்டில் நல்ல அரபு தேசத்து குதிரைகள் வந்திருக்கின்றன என்று கேள்விப்பட்டு, அமைச்சர் மாணிக்கவாசகரிடம் பொன் கொடுத்து, அந்தக் குதிரைகளை வாங்கி வரும்படி பணித்தான்.

மாணிக்கவாசகர், பொன்னோடு திருப்பெருந்துறையை (அறந்தாங்கி அருகே இருக்கும் ஆவுடையார் கோவில்) அடைந்தார். அங்கே, இருந்த குருந்த மரத்தின் அடியில் சிவபெருமானே குருவடிவு எடுத்து அமர்ந்திருந்தார். அவர்முன் சென்று மாணிக்கவாசகர் பணிந்தார். குருவின்



திருக்கரத்தில் இருப்பது என்னவென்று மாணிக்கவாசகர் கேட்க, அவர் சிவஞான போதம் என்றார்.(இது மெய்கண்டார் எழுதிய "சிவஞான போதம் அன்று)

'சிவம் என்பதும், ஞானம் என்பதும், போதம் என்பதும் யாது? அடியேனுக்கு இவற்றைப் போதித்தால் நான் உமது அடிமையாவேன்' என்றார் பக்குவமடைந்திருந்த மாணிக்கவாசகர். சிவஞானத்தை அவருக்குப் போதித்துத் திருவடி தீட்சையும் கொடுத்தார் குருமூர்த்தி வடிவத்தில் வந்த சிவபிரான்.



தன் மந்திரி கோலத்தை அகற்றிக் கோவணம் பூண்டு,குருவின் முன் வாய்பொத்தி நின்ற மாணிக்கவாசகரை, அவருடன் வந்த அரசனின் சிப் பந்திகள் பாண்டிய நாட்டிற்கு செல்ல அழைத்தனர். உடன் செல்ல மறுத்துவிட்டார் மாணிக்கவாசகர்.

செய்தி மன்னரிடம் சென்றது. பாண்டியன் மன்னன் ஒற்றர்களிடம் ஓலையைக் (திருமுகம்) கொடுத் தனுப்பி மாணிக்கவாசகரை கையோடு அழைத்துவரக் கட்டளையிட்டான்.

'குருமூர்த்தியின் திருமுகம் கண்ட கண்ணால் வேறொரு திருமுகம் காண்பதில்லை' என்று கூறி மாணிக்கவாசகர் அதனைக் குருவிடமே கொடுத்துவிட்டார். அதைப் படித்த குருமூர்த்தி, ஒரு மாணிக்கக் கல்லை ஒற்றர் கையில் கொடுத்து 'குதிரைகள் வர இப்பொழுது நல்ல நாளில்லை. ஆவணிமாத மூல நட்சத்திர நாளன்று மதுரைக்குக் குதிரைகள் வந்து சேருமென்று போய்ச் சொல்' என்று அரசனிடம் திருப்பி அனுப்பினார்.

சொன்ன நாளும் அருகில் வந்துகொண்டிருந்தது. ஆனால் குதிரைகள் வருவதாகக் காணோம். மன்னனுக்குக் கோபம் வந்தது. மீண்டும் ஒற்றர்களிடம் குதிரைகள் இருக்குமிடத்தை அறிந்துகொண்டு வரச்சொல்லி அனுப்பினான். அவர்கள் 'எங்குமே குதிரைகள் தென்படவில்லை' என்ற செய்தியோடு திரும்பினர்.

ஆவணி மூலமும் வந்தது. குதிரைகள் வரவில்லை. 'இன்றைக்குள் குதிரைகள் வராவிட்டால் உம்மை வெயிலில் நிறுத்துவேன்' என்று கூறிப் பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரை எரிக்கும் வெயிலில் நிறுத்தினான். அதற்கும் மாணிக்கவாசகர் அசைய வில்லை. இரும்புக் கிட்டியால் இறுக்கி துன்பம் கொடுத்தார். மாணிக்கவாசகர் சிவனைத் தஞ்சம் அடைந்தார்.

உடனே சிவபெருமான்

தனது சிவகணங்களைக் குதிரை வீரர்களாகவும், நரிகளைக் குதிரைக ளாகவும் மாற்றி மதுரைக்கு அனுப்பி, தாமே அதற்குத் தலைவராக நடத்தி வந்தார். இதனாலே, இறைவனுக்குப் பரிமேலழகர் எனும் கரணியப் பெயர் ஏற்பட்டது. ஏராளமான உயர் ரகக் குதிரைகள் மதுரையை நோக்கி வரும் செய்தியை ஒற்றர்கள் மன்னனுக்குச் சொல்லவே அவன் மனம் மகிழ்ந்து அமைச்சரை தண்டனைகளில் இருந்து விடுவித்து அவரைப் போற்றினான்.

குதிரை அணிவகுப்புத் தலைவன் அரசனிடம் குதிரைகளை முன்னும் பின்னும் நடத்தி, அவற்றின் உறுப்புச் சிறப்பைக் கூறி, 'இவை உன்னுடையவை' என்று கூறி ஒப் படைத்தான். விலைகூடிய பீதாம்பரம் ஒன்றை அரசன் அவனுக்குப் பரிசாக அளித்தான். அவனோ அதைத் தன் சவுக்கினால் வாங்கிக் குதிரையின் மேல் போட்டுவிட்டு விடைபெற்றான்.

அன்றிரவே குதிரைகள் மீண்டும் நரியாக மாறி, முதலில் அந்தக் கொட்டடியில் இருந்த குதிரைகளையும் கடித்துவிட்டு ஓடின. இதை அறிந்த அரிமர்த்தன பாண்டியன் மிகவும் கோபம் கொண்டான். கொடுத்த பொன் னையெல்லாம் திருப்பித் தரும்வரை திருவாதவூராரை வைகை யாற்று சுடுமணலில் நிறுத்தி வைக்குமாறு கூறினான்.


சிவபெருமானுக்கு அடியவரின் துன்பம் பொறுக்கவில்லை. கங்கையை வைகையில் பெருக்கெடுக்கச் செய் கிறார்.கரையை உடைத்துக் கொண்டு ஆறு பெருக்கெடுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது.

உடனே பாண்டியன் மன்னன் உடைப்பெடுத்த வைகை ஆற்றுக் கரையை அடைக்க வீட்டிற்கு ஓர் இளைஞன் வந்து கரையை அடைக்கவேண்டும் என்று முரசு அறிவிக்கிறான். அதன்படி மக்கள் அனைவரின் வீட்டில் இருந்தும் ஓர் இளைஞனை அனுப்பி வைக்கின் றார்கள்.

வந்திக் கிழவி எனும் ஒரே ஒருத்தி மட்டும் தனது வீட்டில் தன்னை தவிர வேறு யாருமில்லாததால் அரசரின் உத்தரவிற்கு உதவ முடியவில்லையே என யோசித்துக் கொண்டிருக்கையில் சிவபெருமானே ஓர் இளைஞன் வடிவில் வந்தி கிழவியிடம் வந்து நான் வேண்டீமானால் உன் பங்கிற்கு வேலை செய்யட்டுமா? என்று கேட்கிறார். "செய், ஆனால் நான் கூலியாக உதிர்ந்த பிட்டு மட்டுமே தருவேன்" என்று வந்தி கூறுகிறாள். அதற்கு உடன்பட்ட சிவபெருமான் தனது 'வேலையைத்' தொடங்குகிறார்.

அன்றைக்குப் பார்த்து வந்திக்கு எல்லாப் பிட்டும் உதிர்ந்து போகிறது. இளைஞன் மூக்கு முட்டச் சாப்பிட் டுவிட்டு, மரநிழலில் துண்டை விரித்துத் தூங்குகிறான். மன்னன் வந்து பார்க்கிறான். கரையில் மற்றவர் பங்குகள் அடைபட்டிருக்கின்றன. வந்தியின் பகுதி அடைக்கப்படாமல் உடைந்தே கிடக்கிறது.

கோபம் கொண்ட அரசன் கூலியாளாகிய இளைஞனை பிரம்பால் அடித்தான். தூக்கம் களைந்து எழுந்த கூலியாளோ ஒரு கூடை மண்ணை மட்டும் உடைப்பில் கொட்ட, உடைப்பு மாயமாகச் சரியாகிவிட்டது. உடனே அங்கிருந்து இளைஞன் மறைந்து போனான். ஆனால் அவன் மீது பட்ட பிரம்படி உலகெல்லாம் உள்ள அனைத்து உயிர்களின் மேலும்,



கருவில் இருந்த குழந்தை உட்பட அனைவரின் மீதும் படவே பாண்டிய மன்னன் கலங்கிப் போனான்.

அப்போது சிவபிரானின் குரல் அசரீரியாய்க் கேட்டது, 'மன்னவா! வாதவூராரின் பொருட்டு இத்திருவிளை யாடலை நாம் செய்தோம். இதனை அறியாது நீ கோபம் கொண்டாய்' என்று அக்குரல் சொல்லிற்று. மன்னன் மீண்டும் வாதவூரடிகளைத் தனக்கு மந்திரியாக இருக்க வேண்டினான். அவருக்கு அந்த ஆசை சிறிதும் இல்லாமையால், சிவத்தலங்களுக்குச் சென்று பாடித் துதித்துப் பின் திருச்சிற்றம்பலம் எனப்படும் சிதம்பரத் துக்கு வந்து சேர்ந்தார்.

சிதம்பரத்திலும் சிவபிரான் மாணிக்கவாசகர் முன்னர் ஒரு வேதியர் போல வந்தார். அவரை வரவேற்று வணங்கி 'தாங்கள் யாரோ?' என்று வாதவூரார் கேட்டார். 'நான் பாண்டி நாட்டைச் சேர்ந்தவன். உமது புகழைக் கேட்டு நீர் பாடிய பதிகங்களை ஓத வந்தேன்' என்று அந்தணர் கூறினார்.

'நான் சொல்கிறேன், நீர் அவற்றை எழுதும்' என்று கூறினார் திருவாதவூரார். அதற்கு ஒப்புக்கொண்ட அந்தணர் பலப்பல செய்யுட்களை எழுதி முடித்தார். இறுதியில் திருச்சிற்றம்பலமுடையார் மீது ஒரு கோவைப் பிரபந்தம் பாடவேண்டும் என்று வேண்டினார். வாதவூரடிகளும் பாடி முடித்தார்.

முடித்ததும், ஓலைச்சுவடியின் முடிவில் 'மாணிக்கவாசகன் சொற்படி அம்பலவாணன்' என்று கையொப்பமிட்டுத் திருமுறையைக் கோவிலின் திருவாயிற்படியில் வைத்து விட்டு மறைந்தார்.

அதைப் பார்த்த ஒருவர் அவ்வே டுகளை எடுத்துப் பார்க்க, அது திருவாசகமும் திருக்கோவையும் கொண்ட சுவடியாய் இருந்தது. மிகவும் மனம் மகிழ்ந்த அவர் தில்லை மூவாயிரவரைக் கூட்டிப் பூசைகள் செய்தார். மூவாயிரவர் நடந்த நிகழ்ச்சிகளின் பொருள் என்ன என்று திருவாதவூராரைக் கேட்டனர்.

அவர்கள் அனைவரையும் திருச் சிற்றம்பலத்துக்கு அழைத்துச் சென்ற திருவாதவூரார் பொருள் இதுவே என்று கூறித் தில்லையம்பலத்துக்குள் சென்று மறைந்தார்.

கருணை மிகுந்த கருணைக் கிழங்கு

கிழங்கு வகைகளுள் மிகவும் முக்கியமானது, கருணைக்கிழங்கு. உருளைக் கிழங்கு, சர்க்கரை வள்ளிக்கிழங்கைப்போல் உடலுக்கு நன்மை செய்யும் கிழங்கு இது. எல்லா வயதுக்காரர்களும் குறிப்பாக வாத நோயாளிகள், சிறுவர்கள், வயதானவர்கள் என அனைவரும் பயமில்லாமல் சமைத்துச் சாப் பிடலாம். எந்தத் தீங்கும் செய்யாத கிழங்கு என்பதால்தான் இதைக் கருணைக் கிழங்கு என்கிறார்கள்.



100 கிராம் கிழங்கில் கிடைக்கும் கலோரி 111 ஆகும். கால்சியம் 35 மில்லி கிராம், பாஸ்பரஸ் 20 மில்லி கிராம், வைட்டமின் 'ஏ' வைட்டமின் 'பி' ஆகியவையும் இக்கிழங்கில் உள்ளன. எனவே குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் இக்கிழங்கு இன்றியமையாத ஒன்றாய்த் திகழ்கிறது.

கால்சியத்தால் குழந்தைகள் நன்கு வளர்கிறார்கள். இதே கால்சியம் வயதானவர்களின் எலும்புகள் பலவீனமடைந்து விடாமல் பாதுகாக்கப்படுகிறது. 100 கிராம் கிழங்கில் கார்போஹைடிரேட் 26%ம் ஈரப்பதம் 69.9%ம் இருப்பதால் உடலுக்கு நன்மையும் சக்தியும் அதிகம் கிட்டுகின்றன.

இக்கிழங்கு வாதநோய், மூல நோய், உடல் எரிச்சல், பௌத்ரம், உடல் சூடு, மாதவிடாய்க் கோளாறு, வயிற்று உப்புசம், வயிற்றுவலி, பிற வயிற்றுக் கோளாறு போன்றவற்றைக் குணப்படுத்துகிறது.

அதனால் ஜப்பானில் நோய்தீர்க்கும் கேப்ஸூல்களாக கருணைக் கிழங்கு கேப்ஸூல்கள் தயாரித்து விற்கின்றனர்.

கருணைக் கிழங்கு ஒல்லியாக இருப்பவர்களைக் குண்டாக மாற்றுகிறது. உடலுக்கு நல்ல வலுவையும் கருணைக் கிழங்கு வழங்குகிறது.

கருணைக் கிழங்கு மலச்சிக்கலை நீக்கும். நன்கு பசிக்கச் செய்யும். இந்தக் கிழங்கைச் சாப்பிட்டால் உடனே மலச்சிக்கல் குணமாகி அடுத்த வேளை நன்கு ருசித்து ஆவலுடன் சாப்பிட

நம்மைத் தயார்படுத்திவிடும்.

'பசியில்லை, ருசியில்லை' என்பவர்கள் அவ்வப்போது கருணைக் கிழங்குகளைச் சேர்த்து வருதல் நன்று. அடிக்கடி காபி சாப்பிடுகிறவர்களுக்கு ஏற்படும் பித்தக் கோளாறுகள் இக்கிழங்கால் குணமாகிறது. பசியைத் தூண்டுகிறது.

மண்ணீரல் சம்பந்தமான நோய்கள் குணமாகத் தினமும் இக்கிழங்கை உணவில் சேர்த்து வருதல் வேண்டும்.

சாதாரணமாகக் கருணைக் கிழங்கைத் தோல் நீக்கிச் சிறுதுண்டு களாய் நறுக்கி குழம்பு வைத்துச் சாப்பிட்டாலே மேற்கண்ட நன்மைகள் தொடர்ந்து கிடைக்கும்.

மூலநோய் குணமாக மேற்படி முறையில் சிறுதுண்டுகளாக்கி பசும்பாலில் அவித்து உப்பு சேர்த்து உணவு சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத் திற்கு முன்பாகச் சாப்பிட வேண்டும். தினமும் அதிகபட்சம் இரு வேளை இது போல் சாப்பிட வேண்டும்.

பௌத்திரம் என்னும் இரத்த மூலம் குணமாகப் பசும் பாலில் அவித்த கருணைக் கிழங்குடன் உப்பு, ஒரு டீஸ்பூன் சாப்பாட்டு நெய் சேர்த்து உணவு சாப்பிடுவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகச் சாப்பிடவேண்டும். மூல நோய்க்கான இந்த உணவு மருந்தை தயாரிக்க மண்சட்டியிலேயே கருணைக்கிழங்கை பயன்படுத்தவேண்டும்.

அடிக்கடி வயிற்றுக்கோளாறு, வயிற்றுவலி ஏற்படும் வளரும் குழந்தைகளுக்கு கருணைக் கிழங்கைச் சமைத்துக் கொடுத்து வந்தால் போதும். இக்கிழங்கில் உள்ள செரிமானப் பொருள்களும், கால்சியச் சத்தும் குழந்தைகளுக்கு அதிகம் நன்மை செய்கின்றன.

மூலம், பசியின்மை, தாது பலவீனம் போன்றவை குணமாகக் கருணைக் கிழங்கின் தண்டை கீரை போன்று சமைத்து உண்ண வேண்டும். இதனால் உடலுக்குப் பலமும், நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கின்றன.

கருணைக் கிழங்கின் தாயகம் இந்தியா. இந்தியாவைப் போலவே தெற்கு வியட்நாம், தெற்குக் கடல் தீவுகள் ஆகிய பகுதிகளிலும் கருணைக் கிழங்கு முக்கியமான சிறந்த உணவாகக் கருதப்படுகிறது. ஒரு விதமான நறுமணத்துடன் சிறிது இனிப்புச் சுவையுடன் இருக்கும் இக்கிழங்கை மேற்கண்ட மூன்று நாடுகளின் மக்கள்தாம் விரும்பிச் சாப்பிடுகிறார்கள்.

கருணைக் கிழங்கு வகையை சேர்ந்த காட்டுக் கருணை, காடுகருணை ஆகியவை மிகவும் காரமாய் இருக்கும். இவற்றை அளவுடன்தான் சாப்பிடவேண்டும்.

டி.பாட்டாட்டஸ் என்பது சீன வகை கருணை கிழங்கு ஆகும். இந்தக் கிழங்கை வீட்டை அழகுப்படுத்து வதற்காக பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளில் பயிர் செய்கின்றனர். வீடுகளில் இக்கிழங்கு அழகிற்காகத் தொங்கும். இதில் வேலைப்பாடுகள் செய்தும் தொங்க விட்டிருக்கிறார்கள்.

கருணைக்கிழங்கின் மருத்துவக் குணங்களை நன்கு அறிந்திருக்கும் இந்தியர்கள் பாராட்டுக்குரியவர்களே. அறிந்திருந்தால் மட்டும் போதாது. அதை நாமும் பயன்படுத்தி உடல் ஆரோக்கியம் பெறுவோம்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

சீரடியில் அன்னபூரணி



இராமச்சந்திர ஆத்மாராம் தார்க்கட் குடும்பத்தினரும், அவரது நெருங்கிய நண்பருமான கோவிந் என்பவரும், 6.9.1910 அன்று சீரடிக்கு முதன்முதலாக வந்தார்கள். அவர்கள் முப்பது பேர் கொண்ட குழுவாகப் புறப்பட்டு மும்பை தாதரில் இருந்து இரயிலில் சீரடிக்கு காலை 10 மணியளவில் வந்து சேர்ந்தனர்.

தார்கட்டின் நண்பர் கோவிந் பாபாவை தரிசிப்பதில் மிகுந்த ஆவலாய் இருந்தார். ஏனெனில் பிரார்த்தனா சமாஜத்தில் இருந்த அவருக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கையில்லை. அவர் பல்வேறு சமய நூல்களை கற்றறிந்தபோதும், அதனால் சந்தேகங்கள் அதிகமாகி குழப்பமடையவே செய்தார்.

சீரடிக்கு வருவதற்கு சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்பு தாஸ்கணுவின் கீர்த்தனைகளை கேட்கும் பேறு கிட்டி யது. அது அவரது மனதில் நீங்காத நினைவு களை ஏற்படுத்திட, அதனால் சாயி பாபாவை தரிசிக்க வேண்டும் என்ற ஆவல் அவருக்குள் கொழுந்து விட்டு எரிந்தது.

அவர் பாபாவின் அப்பழுக்கற்ற, தெய்வீகமான, அன்பு ததும்பும் தோற்றத்தை கண்டு நெகிழ்ந்து போனார். அவர் தனக்குள் "தாங்கள் சத்புருஷர் ஆனால் அதை கிரகித்துக்கொள்ளும் ஞானம் எனக்கு கிடையாது.மற்றவர்கள் ஊதுபத்தி, கற்பூரம், தேங்காய் ஆகியவற்றை சமர்ப்பிப்பதைப் பார்த்து நானும் அதையே செய்கிறேன். அவ்வாறு செய்வதால் நான் மாட்டிக்கொள்ள மாட்டேன் என்று நம்புகிறேன் அவ்வளவே!" என்றவாறு தனக்குள் யோசித்தார்.

அதே வேளையில் பாபா, ஒரு தேங்காயை எடுத்து "யாருடையது இது"என்று கேட்டார். அவருடைய நண் பர்கள் அவரை சுட்டிக்காட்டி, "இது அவரு டையது" என்றார்கள். பாபா தேங்காயை கையில் வைத்துக் கொண்டு "இதை எடுத்துக்கொள்" என்றார்.

அந்த தேங்காயை பெறுவதற்காக அவர் எழுந்தபோது பாபா, "இந்த மனிதன் எழுந்து கொள்வதற்குகூட நீண்ட நேரம் எடுத்துக் கொள்கிறார்" என்றார். இதைக் கேட்டு வந்திருந்த அனைவரும்

வாய்விட்டுச் சிரித்தனர். ஆனால் அவர் அதை சட்டை செய்யவில்லை. அந்த தேங்காய் பிரசாதத்தைப் பெறும்போது, அவர் தனக்குள்,"பாபா இங்கு நடப்பது பற்றி எனக்கொன்றும் புரியவில்லை. ஆனால் இனிமேல் என்னுடைய எல்லாச் சுமைகளையும் தாங்கள் மேல் சுமத்தப் போகிறேன்" என்று கூறிக்கொண்டார்.

அவரின் மனதின் குரலை அறிந்த வரான பாபா, உடனே "சரி" என்றார். கோவிந் தன்னைத் தவிர அங்கு கூடியி ருந்த அனைவரும் ஆன்மீக ரீதியாக முன்னேறியவர்கள் என்றும், தான் மட்டுமே அஞ்ஞானியாக, அறியாமையோடு இருப்பதாக கருதினார்.

ஆயினும், தனக்கு ஆதரவு தந்து தன்னை தூக்கிப்பிடிக்க ஒருவர் இருக்கிறார் என்று அவரால் நிம்மதியாக உணர முடிந்தது. பிறகு அவர் பாபாவிடம், பாபா நான் தாங்களிடம் ஒன்று கேட்கலாமா? என்று கேட்க, பாபாவும் கேள் என்றார்.

அதற்கு அவர், "பாபா தாங்கள் எல்லாரோரையும் சமமாக ஒரே மாதிரி யாகத்தான் பார்க்கின்றீர்களா?" என்று கேட்டார். அதற்கு பாபா, "என்ன இது போல் கேட்டுவிட்டாய்! உனக்கு கொஞ் சமாவது அறிவிருக்கின்றதா? என் கருணை யானது அனைவரிடமும் சமமாகவே செலுத்தப்படுகின்றது. மேலும் நான் எல்லோரையும் ஒரே சமநோக்கோடுதான் பார்க்கின்றேன்" என்று பதில் கூறினார்.

மீண்டும் அவரோடு வந்த குழுவினர் அனைவரும் "கொல்" என சிரித்தனர். இந்தச் சிரிப்பினால் அவர் கொஞ்சமும் வருத்தப்படவில்லை. மாறாக, தனக்குப் பின்னால் பாபா இருக்கின்றார் என்ற நம்பிக்கையும், தைரியத்தையும் அவர் முழுமையாக உணர்ந்தார்.

இதைப்போல் உணர்ந்தவருக்கு, "தனக்கு விருப்பமான முறையில், தானும் வழிபடவும், தியானித்திடவும், ஒரு இஷ்ட தெய்வம் இருந்தால் நன்றாக இருக்கும்" என்று தோன்றியது. அந்த கணமே, பாபாவிற்கு ஆரத்தி வழிபாடு தொடங்கியது. அனைவரும் எழுந்து நின்றனர். இவரும் எழுந்து நின்றார்.

ஆனால் இவரின் பார்வை பாபாவைத் தாண்டி சென்றது. அங்கே பழைய பள்ளிக்கூடத்தின் ஜன்னல் திறந்திருப்பது கண்ணில் பட்டது. அதன் வழியே அவர் வெளியே பார்த்தார்.

ஒவ்வொரு நாளும் மாலை வேளைகளில் அன்னை இராதாகிருஷ்ணமாயி அங்கு அகல் விளக்குகளை ஏற்றி வைப்பது வழக்கம் அவர் அந்த ஜன்னல் வழியே, சொக்க வைக்கும் பேரழகைக் கொண்ட பிரகாசமான ஒளி பொருந்திய ஒரு பெண்மணியைக் கண்டார். அவள் தலைமுதல் கால்வரை பல்வேறு விலையுர்ந்த ஆபரணங்களையும்,மிகச் சிறப்பான கலைநயமான பட்டு ஜரிகையுள்ள புடவையையும் அணிந்திருந்தாள்.

அன்னையின் பேரழகு, அவள் ஏற்றி வைத்த விளக்கொளியில் பட்டு மேலும் தேவலோகத்து தேவதையைப் போன்று ஒளிர்ந்தது. அதைப்போன்ற விண்ணுலகப் பேரழகை அவர் இதற்கு முன் பார்த்ததில்லை. தன் வாழ்நாளில் இனிமேலும் பார்க்கப் போவதில்லை.

சட்டென்று திரும்பி அன்னை இவரை அன்புடன் பார்த்தாள். எனவே அவரும் அன்னையை ஆச்சரியமாகப் பார்த்தார். "பேரழகியாக இருக்கும் இந்தப் பெண்மணி யாராக இருக்கும்? இந்தக் குக்கிராமத்தில், இவ்வளவு அசாதாரணமான விலையுயர்ந்த ஆபரணங்களும், அழகிய துணிமணிகளும் அவளுக்கு எப்படி கிடைத்தன? எவ்வித கவலையோ, பயமுமின்றி எப்படி அவளால்



சுதந்திரமாக நடமாட முடிகிறது?" இப்படியாக பல்வேறு கேள்விகள் அவரது மனதில் எழுந்தன.

திடீரென அவருக்கு தான் வேறு யாரோ ஒருவரின் உரிமையானவரை பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்று தோன்றியது. அவர் தன் தவறை உணர்ந்து திரும்பி பாபாவைப் பார்த்தார். உண்மையில் பாபாவும் அவரது செயலை அறிந்தவராக அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆரத்தி தொடர்ந்து நடந்து கொண்டி ருந்தது. எனினும் அவரது பார்வை அந்த தெய்வீகப் பேரழகை நோக்கியே திரும்பியது. இறுதியாக தன் மனதை யாரோ கட்டுப்படுத்து வதைப் போல் உணர்ந்தார். அதன்பின்னர், அந்தப் பக்கமே பார்க்கக்கூடாது என்று தீர்மானித்து மனதை ஒருநிலைப் படுத்தினார்.

இந்நிகழ்ச்சிக்குப்பின் அடுத்தடுத்து அவர் சீரடிக்கு வந்த போது "அன்னையை" அவர் மீண்டும் பார்க்க நேர்ந்தது. ஒரு நாள் மாலை அவர், நண்பர் பலராம் மான்கரோடு பேசிக்கொண்டிருக்கையில், அன்னையைப் பற்றி அவரிடம் கேட்டார்.

மான்கர் அவரிடம், அது வேறு யாரும் அல்ல, "அது சாக்ஷாத் அன்னபூரணி தேவியே தவிர வேறு யாருமில்லை" அப்படி இல்லை என்றால் ஒன்றுமே இல்லாத இந்த குக்கிராமத்தில் பாபாவை தரிசிக்கவரும் ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு தான் ஒருத்தியே எவ்வாறு உணவளிக்க முடியும், அன்னை அதை தொடர்ந்து செய்து வருவது ஆச்சர்யமல்லவா? அவ்வாறு அந்த அன்னபூரணியாகிய அன்னையின் தரிசனத்தைப் பெறும் பேறு தனக்கும் கிட்டியது என்றும் கூறினார்.

அன்னையின் தரிசனம் தனக்கு கிட்டிய பிறகு, உலகாயத வாழ்க்கையின் மீதும், உலகப் பொருட்களின் மீதும் ஒரு வித விரக்தி ஏற்பட்டு, அவற்றை துறந்துவிட்டு சீரடிக்கே வந்து தங்கி தானும் ஓர் பக்கீராக மாறிவிட்டதாக மான்கர் அன்னையின் தரிசனத்தைப் பற்றி சிலாகித்துக் கூறினார்.

அதன்பின் கோவிந்தும் கூட, தன் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை உணர்ந்தார். முன்பெல்லாம் பெண்களை ஏளனமாகவும், போகப் பொருளாகவும், உதாசீனமாகவும், நடத்திய அவர் இப்போது பெண்களை மிகவும் மரியாதையுடன் பார்க்கத் தொடங்கிவிட்டார்.

இதைப்போன்று அன்னை இராதாகிருஷ்ணமாயி சீரடியில் அநேக பக்தர்களுக்கு அவர்கள் அறியாமலே அருள் புரிந்திருக்கின்றாள். மேலும் சீரடியில் பகவான் சாயிநாதருக்கு சேவை செய்ய வேண்டி அன்னபூரணியே அன்னையாக சீரடி மண்ணில் வசித்து வந்தாள் என்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

ஜெய் சாய்ராம்!

ஜெய் இராதா கிருஷ்ணமாயி!

பாலாஜி வசந்த் தலீம்



சமாதி மந்திரில் காணும் பாபாவின் சிலை இவர் கைவண் ணத்தில் தயாரானது.சிலையை தயார் செய்ய பாபாவின் புகைப் படம் மட்டுமே அவரிடம் இருந் தது. அதை வைத்து அவரால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

"எனக்கு நேரில் தரிசனம் கொடுங்கள். அல்லது கனவி லாவது தரிசனம் கொடுங்கள். அப்போது தான் பக்தர்கள் தெய்வீக உணர்வுடன் வணங்க தக்க உங்கள் சிலையை என்னால் செய்ய முடியும்" என்று பாபாவிடம் பிரார்த்தித்தார் தலீம்.

ஒரு நாள் காலை 7 மணி அளவில் தான் சிலை செய்யும் அறைக்குள் நுழைந்தவுடன் கண்ணைப் பறிக்கும் ஒளி வெள்ளத்தில் பாபா காட்சி தந்தார். சிலை தயாரிக்கும் பொழுதே எப்படியெல்லாம் செதுக்க வேண்டும் என்று ஒரு தெய்வீகக் குரல் அவர் காதுகளில் கேட்டுக் கொண்டே இருந்ததுதாம்.

இந்த சிலையை செதுக்கிய பிறகு திரு. தலீம் வேறு பாபா சிலைகள் எதையுமே செதுக்கவில்லை. தன்னுடைய 82 ம் வயதில் 1970 ஆம் ஆண்டு தலீம் காலமானார். சமாதி மந்திரில் ஸ்வாமி சரண் ஆனந்த் என்பவரால் 1954 ம் ஆண்டு அக்டோபர் மாதம் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

குருஸ்தான்



பாபா வாழ்ந்த காலத்திலேயே இந்த குருஸ்தானில் உள்ள மண்டபம் போன்ற அமைப்பிற்குள் பாபாவின் படம் ஒன்று வைக்கப்பட்டது. பாபா முதன் முதலாக பதினாறு வயதுப் பையனாக சீரடிக்கு வந்த பொழுது அமர்ந்த வேப்பமரத்தையும் காணலாம்.

பாபாவின் புகைப்படத்திற்கு முன்னால் தனது அடியவரான மேகா என்ற சிவபக்தனுக்கு பாபா பரிசாக அளித்த சிவலிங்கத்தையும் காணலாம்.

(மேகாவின் கனவில் சூலம் வரை என்று பாபா கூறியதை நினைவு கூறுங்கள் சத்சரிதம் 28ம் அத்தியாயம்). மகா சிவராத்திரியன்று ஒவ்வொரு ஆண்டும் இதற்கு ருத்ராபிஷேக பாராயணமும், அபிஷேகம் நடக்கும்.

1912ம் ஆண்டு மேகா சமாதி அடைந்த பிறகு, அவரிடம் இருந்த சிவலிங்கம் இங்கே பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்




- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஓம் ஸ்ரீ பத்மநாப அடிகளின் சுய சரிதத்தை அறிந்து கொண்டு, சுவாமிகளின் ஜீவ பீடத்தை தரிசிப்போம்.

ஓம் ஸ்ரீ பத்மநாப அடிகள்

சென்னை மாவட்டத்தில் உள்ள புளியந்தோப்பு என்ற ஊரில்,1917 ஆம் வருடம், திரு. அப்பாத்துரை தெய்வானை தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். சுவாமிகளுக்கு பெற்றோர் இட்ட பெயர் ஜெயராமன் என்பதாகும்.

சுவாமிகள் தனது 12 வது வயதி லேயே தீவிர ஆன்மீக நாட்டம் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி, ஆன்மீகத் தேடுதலில் ஈடுபட்டார். குறிப்பிட்ட காலத்திற்குப்பின் வீடுதிரும்பிய சுவாமிகளுக்கு பெற்றோர் அவருக்கு சுந்தராம்பாள் என்ற பெண்ணை மணமுடித்து வைத்தனர்.



இனிய இல்லறத்தின் பயனாக சுவாமிகளுக்கு, பரமானந்தம், சுப்பிர மணி, சீனிவாசன், சைவ மணி, என்ற நான்கு ஆண் குழந்தைகளும், ஞான சௌந்தரி, சிவகாமி, கலைவாணி, ஆகிய மூன்று பெண் குழந்தைகளும் பிறந்தனர். சுவாமிகள் இல்லறத்தில்

இருந்து அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொடுத்து விட்டு, ஆன்மீகத் தேடுதலிலும் ஈடுபட்டார். பல குருநாதர்களை சந்தித்து பயிற்சி செய்ததின் பலனாக, சித்த வைத்திய முறைகளை கற்றுத் தேர்ந்து மருந்துகளை தயாரிக்கும் அளவிற்கு வளர்ந்தார். இதன்மூலம் பல அன்பர்களுக்கு வைத்தியம் செய்தார்.

குடும்ப சூழ்நிலை காரணமாக, இந்திய இராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்காக பாடுபட்டார். இராணுவ சேவையின் போது அங்கு யாருக்கேனும் உடல் நலமில்லாத போது, சுவாமிகள் அவர்களுக்கு சித்த வைத்தியத்தின் மூலம் சிகிச்சையளித்து குணப்படுத்துவார்.

சுவாமிகளின் வைத்திய முறைகளை அறிந்து கொண்டு இவரின் உயர் அதிகாரிகள் சுவாமிகளை வெகுவாகப் பாரட்டுவார்கள். சிலகால இராணுவப் பணிக்குப் பின் சுவாமிகளுக்கு ஆன்மீக நாட்டம் அதிகரிக்கவே, தன் இராணுவ பணியை விட்டு விலகி தன் சொந்த ஊரான சென்னைக்குத் திரும்பினார்.

இராணுவப் பணியில் தனக்குக் கிடைத்த பணத்தை வைத்து சென்னை அயனாவரம் பகுதியில் வீடு கட்டி வசித்து வந்தார். பல குருநாதர்களிடம் சித்த அறிவைப் பெற்றிருந்தாலும், தனது குருவாக மயிலை சிவஞான நடராஜ சுவாமிகளையே ஏற்றுக்கொண்டார்.

சுவாமிகள் தான் கற்ற பாடங்களையும் தனது சொந்த அனுபவங்களையும், உபதேச மொழிகள் என்ற புத்தகமாக எழுதி ஆன்மீக உலகிற்கு வழங்கியுள்ளார்.

சுவாமிகள் வாசியோகத்தில் நிபுணத்துவம் பெற்றவர். தன்னை நாடிவந்த சீடர்கள் பலருக்கு வாசி யோகத்தை கற்றுத்தந்து அவர்களை சிறந்த மனிதர்களாக உருவாக்கினார். இவர்களது சீடர்கள் இன்றும் பல ஊர்களில் வசித்து வருகின்றனர். குருபூஜை தினத்தன்று அனைவரும் ஒன்று கூடி சுவாமிகளின் சீவபீடத்தை





வணங்குவதை மிகச் சிறப்பாக செய்து வருகின்றனர்.

சுவாமிகளின் ஆன்மீகச் சேவையை பாராட்டி அண்ணா பல் கலைகழகத்தில் நடைபெற்ற விழாவில், ஓம் ஸ்ரீ பத்மநாப அடிகள் என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார்கள்.

சுவாமிகள் இல்லறமே நல்லறம் என்று வாழ்ந்தவர்கள். எனவே தனது பிள்ளைகள் அனைவருக்கும் திருமணத்தை நடத்தி முடித்து, குடும்பத்திற்கு தேவையான அனைத் தையும் செய்து முடித்து தனது குடும்பத்தினரின் அனுமதியோடு 1974 ல், ஆற்காடு மாவட்டம் திமிரி என்ற பகுதியில் உள்ள குமரகிரி மலை அடிவாரத்தில் குடில் அமைத்து கொண்டு ஆன்மீக சேவை செய்து வந்தார்.

பிணிகளோடு வரும் பக்தர் களுக்கு தானே சித்த மருந்துகளை தயாரித்துக் கொடுத்து அவர்களின் பிணி களைப் போக்கியருளினார். மனக்குறை களுடன் வரும் பக்தர்களுக்கு, விபூதி கொடுத்து ஆசி கூறுவார்.

தீராத மனநோய் உள்ளவர்களுக்கும், செய்வினை கோளாறு உள்ள வர்களுக்கும் இவர் கொடுக்கும் விபூதியே சிறந்த மருந்தாக செயல் பட்டு அவர்களது பிரச்சனைகளை விரைவில் தீர்ந்தது. இந்த செய்தி ஊர்முழுக்க பரவ திமிரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமத்து மக்கள் சுவாமிகளிடம் வந்து பயன் பெற்றனர்.

சுவாமிகள் தான் வாழும் காலத்தில் தனக்குண்டான சமாதியை, தான் வாழ்ந்த குடில் இருந்த இடத்திலேயே, அமைத்துக்கொண்டார்கள்.

தன்னை நம்பிவந்த அனைத்து அடியவர்களுக்கும் அனைத்து நலன்களையும் அருளி, ஆன்மீக சேவைகளை செய்து வந்த சித்தர் பெருமான் ஓம் ஸ்ரீ பத்மநாப அடிகள் தனது 93 வது வயதில் 25.11.2020 அன்று சமாதி நிலையை அடைந்தார். சுவாமிகளின் விருப்பத்தின்படியே அவரது உடல் அவர் ஏற்படுத்தியிருந்த பீடத்திலேயே சமாதி செய்யப்பட்டது.

சுவாமிகளின் குருபூஜை வருடந்தோறும் சித்ரா பவுர்ணமி அன்று வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அவரது சீவ பீடத்தில்

மாதந்தோறும் கார்த்திகை அன்று தொடர்ந்து அன்னதானம் நடந்து வருகின்றது.

சுவாமிகளின் சீவபீடம், சுத்தமாக பராமரிக்கப்பட்டு அமைதி நிறைந்த இடமாக தவ ஆற்றல் நிறைந்த ஆற்றல்களமாக விளங்குகிறது. பக்தர் கள் அருள்நிறைந்த சித்த புருஷரின் வரலாற்றை அறிந்து அவரை வணங்கி கர்மவினையின் வீரியத்தை குறைத்துக் கொள்ளுங்கள்.

சித்தர்களை வணங்கி அவன்தாள் பணிவோம்!

சீரான வாழ்க்கையை சிக்கலின்றி பெறுவோம்!

சீவபீட முகவரி:

ஓம் ஸ்ரீ பத்மநாப சுவாமிகள் ஆசிரமம்,
எண்.7, குமரகிரி மலை அடிவாரம்,
திமிரி போஸ்ட்,
வேலூர் மாவட்டம் 632512.

சென்னையில் இருந்து வருபவர்கள், ஆற்காடு வந்து அங்கிருந்து திமிரி குமரகிரிமலை செல்லும் பேரூந்தில் பயணம் செய்து ஆசிரமத்தை அடையலாம்.

பேரூந்து வழித்தடம்:
சென்னை ஆற்காடு,
ஆற்காடு திமிரி,
இறங்கும் இடம்: திமிரி

புகைவண்டி மார்க்கம்: சென்னை வேலூர் / இறங்கும் இடம் : காட்பாடி

காட்பாடியில் இருந்து ஆற்காடு பேரூந்தில் ஏறி குமரகிரிமலை அடிவாரம் என்று கேட்டு இறங்கவும் .

– (தொடரும்)

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

டி.நகர். கோரிக்கை பாபா



சென்னையின் வர்த்தக மையமான டி.நகர் பேரூந்து நிலையத்தின் அருகே நம்பர்: 9 மெட்லி ரோட்டில் பக்தர்களுக்கு கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாய் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றார் கோரிக்கை பாபா.

அது என்ன கோரிக்கை பாபா? பக்தர்களின் கோரிக்கை எதுவானாலும் உடனடியாக நிறைவேற்றித் தருவதால் சீரடி சாய் தியான மையம் என்ற பெயர், பாபாவின் பக்தர்களால் கோரிக்கை பாபா என்று அழைக்கப்படுகின்றது.

இப்பகுதியில் வியாபார நிறுவனங்கள் அதிகளவில் இருப்பதால், அங்கு வேலை செய்யும் கூலியாட்களும், வெளியூரில் இருந்து வேலை தேடி வருவோரும், ஏழை எளிய மக்களும் மதிய உணவு கிடைக்காமல் திண்டாடுவதை கண்ட இக்கோவிலின் நிறுவனர்கள், பாபா பக்தரும், சகோதரர்களுமான திரு. ராஜகோபால், திரு. கணேஷ் ஆகியோர் ஏழை தொழிலாளிகளுக்காக ஏதாவது செய்ய வேண்டுமே என்று சிந்தித்திருக்கின்றனர்.


அதன் விளைவாக 2017 ல் உருவானதே டி.நகர் சீரடி சாயி தியான மையம். பாபா பக்தர்களுக்கு ஓர் அழகிய ஆலயமும் கிடைத்தது. ஏழை தொழிலாளிகளுக்கும், இல்லாதோருக்கும் கடந்த ஐந்து ஆண்டுகளாக தினமும் தவறாமல் அன்னமும் கிடைத்து வருகிறது.

ஆலயத்தில் தினந்தோறும் மதியம் அன்னதானம் நடைபெறும். அதை அன்னதானம் என்பதைவிட "சமத்துவ அன்னதானம்" என்றுதான் கூற வேண்டும். ஏனெனில்

இவ்வாலயத்தின் அன்னதானத்தில் ஏழை முதல் பணக்காரர்கள் வரை, ஆதரவற்றவர்களில் இருந்து இயலாதவர்கள் வரை அனைவரும் கலந்துகொண்டு பசியாறுகின்றார்கள்.

ஆலயத்தில் தினந்தோறும் நடைபெறும் ஆரத்திகளும், விசேட தினங்களில் நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. வாய்புள்ளவர்கள் ஒருமுறை டி.நகர் கோரிக்கை பாபாவை தரிசித்து உங்கள் கோரிக்கையை நிறை வேற்றிக்கொள்ளுங்கள்.

ஆலயத்தை தன்னுடைய அலுவலக ஓய்விற்குப்பின் திரு.என்.எஸ்.ராமன் அவர்கள் மிகவும் சிறப்பாகவும், சுத்தமாகவும், பக்தர்களின் மனம் கோணாமலும் ஆத்மார்த்தமாக நிர்வகித்து வருகின்றார்.



தினந்தோறும் 200 நபர்களுக்கும் குறைவில்லாமல் மதியம் அன்னதானம் செய்யப்படுகின்றது.

அன்னதானத்திலும், பூஜைகளிலும் நீங்களும் கலந்து கொண்டு சாயிநாதரின் ஆசியையும், அருளையும் பெறுங்கள்.





தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

சீரடி சாய் தியான மையம்,

No:9, மெட்லி ரோடு,
டி.நகர், சென்னை 17.
PH: 91760 76065

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு.பாலகிருஷ்ணன். அண்ணாநகர் ரூ.3000.
திரு.சாந்தமூர்த்திபாஞ்சாலி சாய்னி போரூர்.ரூ.3000
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திருமதி.உமா மகேஸ்வரி.ஜோதிடர். அயனாவரம்.ரூ.2000.
திருமதி.பிரவீணா சுவாமிநாதன். சென்னை.ரூ.1000.
திரு.யோகானந்தம் மகேஸ்வரன். மதுரை.ரூ.1500.
திரு.சதீஷ்குமார் மகாலிங்கம்.ரூ.1000.
திரு.மதன்சிங். பெரவள்ளூர்.ரூ.1000.
திரு.என் கோலப்பன். நெய்வேலி. ரூ.1000.
Mrs. NEELAM. BANGALORE - Rs.1000.

திருமதி.உமாவிஜய் ஆனந்த்.அயனாவரம். ரூ.800
திருமதி.சுகன்யா. சென்னை. ரூ.650.
திருமதி.ஜானகி சீனிவாசன். கொளத்தூர்.ரூ.500.
திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி. ரூ.500.
திரு.சக்திவேல் உமா. AYK ரூ.500.
திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.
திரு.மாதவன் டி.நகர்.சென்னை.ரூ. 500.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.திலகம்இதயக்கனி. கதிர்.ரூ. 300
திரு. செல்வவிநாயகம். மணலி.ரூ.200
திரு.பத்ரிநாராயணன்.நெய்வேலி. ரூ.200.
திருமதி.லதா பாபு. வேப்பம்பட்டு.ரூ.200
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.ரங்கநாயகி குடும்பத்தார். திட்டை.ரூ.200.
திருமதி.பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.200
திரு.குமரன்ஸ்டோர்ஸ்.-டிராவல்ஸ்.பெரியார் நகர் ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.ஜெயதேனிஷா. சென்னை.ரூ.200
திரு.மகேஷ்பிரபு சுகன்யா சென்னை. ரூ.100
திரு.ரவி.ஆரணி.ரூ.100.
திருமதி. சாந்திமோகன். AYK. ரூ.100.
திருமதி.அபிராமி அசோக்.AYK. ரூ.100.
பெரியார் நகர் பாபா பக்தர்கள். ரூ. 50.
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
திருநீர்மலை.அரிசி 25 கி.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.



சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திருமதி.சுமதி. வாழ்க வளமுடன் கொளத்தூர். ரூ.500.
திரு. உதி.மூர்த்தி பெரம்பூர்.ரூ.400.
திருமதி. ஜானகி சீனிவாசன். கொளத்தூர். ரூ.200.
திரு. சிவக்குமார். குரோம்பேட்டை. ரூ.200.
திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068